janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 86 | 2023 ஏப்ரல் 30 - மே 06 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 04





மதவெறி, கார்ப்பரேட் ஆதரவு மோடி அரசை வீழ்த்துவோம்!



ப 03

284 கோடி கரங்களைக் கொண்ட நாடு!



ப 02

நிறுத்தி வைத்தது நல்லது, முற்றாக ரத்து செய்ய வேண்டும்



ப 08

## பாஜக ஆட்சியை அகற்றுவோம்! நாட்டையும் மக்களையும் காப்போம்!

## 2023 மே 5 முதல் 20 வரை

# மாற்றத்தை நோக்கி..

# சி.பி.ஐ. நாடு தழுவிய நடைபயண இயக்கம்!

**வகுப்புவெறி ஆர்.எஸ்.எஸ்.- பா.ஜ.க. கூட்டை எதிர்த்து முறியடிக்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு வழிகாட்டுதலின்படி, நடைபயணம் மேற்கொள்ள மாநிலக்குழு தீர்மானித்தது. அதன் அடிப்படையில் மே 5 முதல் 10 வரை மாபெரும் நடைபயண இயக்கம் தொடங்குகிறது.**

ஒன்றிய அரசில், ஆர்.எஸ்.எஸ்பிஜேபி ஆட்சிக்கு வந்து பத்து ஆண்டுகள் நிறைவு பெறப் போகிறது.

ஆட்சிக்கு வரும் முன் மோடியும், பாஜகவும் ஏராளமான வாக்குறுதிகளை, தாராளமாக வழங்கி நம்பிக்கையூட்டினர்.

கார்ப்பரேட் ஆதரவுடன் அவர்கள் நடத்தும் ஆட்சி காற்றடித்த பலூன் போல காட்சியளித்து, இன்று நெருக்கடியில் வெடித்து சிதறி வருகிறது.

வீட்டுக்கு ரூபாய் 15 லட்சம் என்றார், 15 ரூபாய் கூட தரவில்லை!

ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலைஎன்றார்,ஏற்கனவேஇருந்தபலகோடி வேலைகளைப் பறித்து தொழிலாளர்கள் வீதியில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

கருப்பு பணத்தை ஒழிப்பேன் என்றார். இப்போது கள்ளப் பணம்தான் ஆட்சி நடத்துகிறது

பயிர் வைக்க விவசாயி செலவழித்த பணத்தை காட்டிலும், இரண்டு மடங்கு அதிகமாக விலை கிடைக்கச் செய்வேன் என்றார். உள்ள உரிமைகளையும் பறித்து வேளாண் வணிக சட்டங்கள் இயற்றியதால், 700 பேர் உயிரைப் பலி கொடுத்து, விவசாயிகள் ஓராண்டுககும் மேலாக தொடர்ந்து போராடி முறியடிக்க நேரிட்டது.

150 ஆண்டுகள் போராடி பெற்ற தொழிலாளர்களின் உரிமைகள் அனைத்தையும் பறித்து, நான்கு சட்டத்தொகுப்புகளை மோடி அரசு வெளியிட்டுள்ளது. இனி நிரந்தர தொழிலாளர் யாரும் இல்லை, அன்றாடக் கூலிகள் மட்டுமே மிஞ்சுவார்கள் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

450 ரூபாய்க்கு விற்ற சமையல் வாயு சிலிண்டர், ரூ1300 ஆக உயர்ந்து விட்டது.

பெட்ரோல் விலை ரூ. 100 ரூபாய் தாண்ட, டீசல் அதனை எட்டிப் பிடிக்கிறது. இதனால் அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களின் விலை தாறுமாறாக உயர்ந்து செல்கிறது.

மருத்துவமும் கல்வியும் வணிகப் பொருளாகி விட்டன. கையில் பெரும் பணம் இல்லை என்றால் படிப்பும் இல்லை, உயிரும் இல்லை என்றாகி விட்டது.

மோடி அரசின் ஆதரவில் அதானி அம்பானி கும்பல் நாட்டைச் சூறையாடுகின்றனர். 75 ஆண்டுகளாக மக்கள் வரிப்பணத்தில் உருவாக்கிய துறைமுகங்கள், விமான நிலையங்கள், விமானங்கள், நெடுஞ்சாலைகள், ரயில்கள், ராணுவ ஆயுதத் தொழிற்சாலைகள் அனைத்தையும் ஏறக்குறைய இலவசமாகவே அவர்களுக்கு தருகிறார் மோடி.

அதானி உலகின் மூன்றாவது மிகப்பெரிய பணக்காரராக உயர்ந்து விட்டார். , நாட்டு மக்களில் கிட்டத்தட்ட சரி பாதிப்பேர் வறுமை கோட்டுக்கு கீழே துயரப் படுகுழியில் தள்ளப்பட்டுள்ளனர்.

இவற்றைப் பற்றி பேச வாய் திறந்தால், மதம், சாதி பெருமைபேசி, வெறியூட்டி கலவரங்கள் உருவாக்கி, நடத்தும் மனித படுகொலைகள் மூலம் வாயை அடைக்கிறார்கள். கவனத்தை திசை திருப்புகிறார்கள்..

- மதவெறி பாசிசத்தில் இருந்தும் ஊழல் அடிமைத் தனத்திலிருந்தும் அன்னை பூமியை மீட்க வேண்டும்.
- மக்கள் நல்லிணக்கமும் சமூக நீதியும் நிலை பெற வேண்டும்
- மக்கள் சமூகத்துக்கு பயனளிக்கும் வகையில் தொழில் வளர்ச்சி தொடர்ந்திட வேண்டும்..
- வேலை வாய்ப்புகளை கூடுதல் ஆக்கிட, இருக்கும் வேலைக்கு பாதுகாப்பு கிடைத்திட...
- விவசாயிகள் உழைப்பாளர்கள் நலன் காக்கப்பட...
- ஜனநாயகமும் மதச்சார்பின்மையும் பாதுகாக்கப்பட...
- விழிப்புணர்வு பெற்று மக்கள் ஒன்றுபடுவது காலத்தின் அவசியம்.
- ஒன்றிய அரசில் அமர்ந்து, கார்ப்பரேட் முதலாளித்துவத்துடன் கைகோர்த்து மதவெறியை கொள்கைகாக கொண்டுமக்ளை வதைக்கிற இன்றைய பிஜேபி நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியை தூக்கி எறிவோம்!

அனைத்து மக்கள் போராட்டங்களும் இயக்கங்களும் ஒன்று சேர்ந்தால் பெரும் மாற்றத்தை உருவாக்க முடியும்.

எல்லோருக்கும் எல்லா வாய்ப்பும் கிடைக்கும் சோசலிச இந்தியாவை உருவாக்கவும் முடியும் என்று மக்களின் நலனுக்காகப் போராடும் கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுதியாக நம்புகிறது!

ஒன்றுபட்ட போராட்டங்கள் வென்று காட்டும் நிச்சயம்..

பாஜகவை ஒன்றிய ஆட்சியிலிருந்து அகற்றுவோம்! நாட்டையும், மக்களையும் பாதுகாப்போம்!

நடைபயணத்தை வெற்றி பெற வைப்போம்!



கட்சிக் கடிதம்

# 284 கோடி கரங்களைக் கொண்ட நாடு!



போர்க்குணமிக்க தோழர்களே!

**நம் நாடு உலகத்தின் மக்கள் தொகையில் முதன்மையான நாடு! 200 ஆண்டு காலம் வரை நம்மை விட மக்கள் தொகையில் அதிகம் உள்ள நாடாக, உலகின் முதன்மை நாடாக சீனா முன்னிலையில் இருந்தது.**

தற்போது (2023) சீனாவை மிஞ்சி இந்தியா முதன்மை பெற்று விளங்குகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை, மக்கள் தொகை நிதியத்தின் உலக மக்கள் தொகை அறிக்கை இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

நம் நாட்டின் தற்போதைய மக்கள் தொகை 142.86 கோடி.

சீனாவின் மக்கள் தொகை 142.57 கோடி.

சீனாவின் மக்கள் தொகையை விட நாம் அதிகளவில் உள்ளோம். இது யாருடைய சாதனையும் அல்ல, இயல்பாக அமைந்திட்ட ஒன்று.

நம் நாட்டு மக்கள் தொகையில் 14 வயதிற்கு உட்பட்டவர்கள் 25% பேர். 15 வயது முதல் 65 வயதுக்குட்பட்டவர்கள் 68% பேர். 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் 17% பேர் மட்டுமே!

142 கோடி மக்களும் யார்? இந்துக்களா? முஸ்லிம்களா? கிறிஸ்தவர்களா? பௌத்தர்களா? சீக்கியர்களா? என வினா தொடுத்தால், அத்தனை மதத்தவரும் சார்ந்த மக்கள்தான் 142 கோடி பேரும்.

மதவாரியாக கணக்கிட்டால், ஒவ்வொரு மதத்திற்கும் ஏற்ற தாழ்வுகள் உண்டு!

இங்கு ஏற்றத்தாழ்வுகளுக்கு இடமில்லை– எல்லோரும் இந்தியர்கள்தான்.

எம்மொழி பேசுபவர்கள் அதிகம்? எது பெரும்பான்மை மக்கள் பேசும் மொழி? என்ற கேள்விக்கே இடமில்லை.

“செப்பு மொழி பதினெட்டு உடையாள் எனிற்
சிந்தை ஒன்றுடையாள்” என்று பாரதி பதில் சொல்லி முடித்து விட்டான்.

நான்காயிரத்து அறுநூறுக்கு மேல் உள்ள சாதிகளில், எச்சாதியை சேர்ந்த மக்கள் அதிகம்? என்ற கேள்விக்கும் இடமில்லை.

142 கோடி மக்களைக் கொண்ட நாட்டை, மதம் என்ற பெயரால், மொழி என்ற பெயரால், சாதி என்ற பெயரால் பிளவுபடுத்தும் அரசியல் அற்பத்தனமானது!

மக்கள் தொகையில் முதன்மை பெற்ற நாட்டை முன்னேற்றப் பாதையில் எவ்வாறு கொண்டு செல்வது? எப்பாதையில் செல்ல வேண்டும் என்பது குறித்து நாட்டு மக்கள் தெளிவான முடிவிற்கு வருதல் வேண்டும்.

மக்கள் தொகையில் உலகின் முதல் இடத்தில் இருந்து, இரண்டாம் இடத்திற்கு சென்று விட்ட சீனா என்ன சொல்கிறது?

“எண்ணிக்கை முக்கியம் என்றாலும் கூட, திறன்வளம்தான் தாக்கம் ஏற்படுத்தக் கூடியதாகும். எங்கள் நாட்டு மக்களில் ஒன்பது கோடி பேர் திறன் மிக்கவர்களாக உள்ளனர்” என்று குறிப்பிட்டுள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நாடு முழுவதும் 15 வயது முதல் 24 வயதுடைய, கடுமையாக உழைக்கக்கூடிய இளைஞர் பட்டாளம் 25.4 கோடி பேர் உள்ளனர்.

இத்தகைய ஆற்றல்மிகு இளைஞர்களை நாம் பெற்றிருப்பது பெருமைக்குரிய ஒன்றல்லவா?

இத்தகைய இளைஞர்களிடம் காணப்படும் அவநம்பிக்கையை அகற்றிட, நம்பிக்கையூட்ட நாம் என்ன செய்யப் போகின்றோம்?

ஏழைகள் நிறைந்த நாடு என்பது உண்மைதான். ஏழ்மைக்கு என்ன காரணம்? ஏழைகள் காரணமா?

உணவு உற்பத்தியில் நாடு தன்னிறைவு பெற்று விளங்குகின்றது.

கோதுமை உற்பத்தியில் மட்டும் இந்நிதியாண்டில் (2022–23) 112 பில்லியன் டன் உற்பத்தி செய்து விவசாயிகள் சாதனை படைத்துள்ளனர்.

பால் உற்பத்தியில் 183.96 மில்லியன் டன் என சாதனை படைத்துள்ளனர்.

அமெரிக்க நாட்டை காட்டிலும் பால் உற்பத்தியில் 50% அதிகம். சீனாவை விட மூன்று மடங்கு அதிகம்.

உணவு உற்பத்தியில், பால் உற்பத்தியில் உலகை மிஞ்சி நிற்கும் நம் நாட்டில், நாள் தோறும் 20 கோடி மக்கள் இராச்சோற்றுக்கு வழி இன்றி இராப்பட்டினி கிடந்திடும் அவலம் ஏன்?

இதற்கு யார் பொறுப்பு? எந்த ஆண்டவன் இந்த தலைவிதியை தீர்மானித்தான்?

உலகின் மக்கள் தொகையில் முதன்மை பெற்ற நாட்டை, உலகின் முதன்மையான நாடாக வேண்டுமென நம் மகாகவி பாரதி,

“முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை – வாழ்க!”

என்றான்.

அவனது காலத்தில் முப்பது கோடி. இன்று நம் காலத்தில் 142 கோடி.

142 கோடி என்பது வெறும் வயிறுடைய மக்கள் அல்ல. மாறாக 284 கரமுடையவர்கள்!

இப்பெரும் எண்ணிக்கை கரங்களுக்கு வேண்டுவது எது?

பாரதி கூறுகின்றான்,

“மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ? – புலனில்
வாழ்க்கை இனியுண்டோ? – நம்மிலந்த
வாழ்க்கை இனியுண்டோ?
இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெருநாடு,
கனியும் கிழங்கும் தானி யங்களும்
கணக்கின்றித் தரு நாடு – இது
கணக்கின்றித் தரு நாடு – நித்த நித்தம்
கணக்கின்றித் தரு நாடு – வாழ்க!”

கனியும், கிழங்கும், தானியங்களையும் நித்தம், நித்தம் தருகின்ற நாட்டில் ஏன் வறுமை? ஏன் வளமையற்ற வாழ்க்கை? ஏன் வேலையின்மை? இவைகளுக்கு யார் பொறுப்பு? எச்சமூக அமைப்பு பொறுப்பு?

வினாக்களுக்கு விடை தருகின்றான் பாரதி,

“இனியொரு விதிசெய் வோம் அதை
எந்த நாளும் காப்போம்,
தனியொரு வனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடு வோம் – வாழ்க!”

என ஆவேசம் பொங்க பொங்கி எழுந்தான். ஏனெனில் நாட்டின் வளமை அறிந்தான். அறிந்த காரணத்தால், வளமை எல்லாம் தவறான பாதையில் செல்கிறது. அதனை தடுத்து நிறுத்திட வேண்டும். அதற்கான ஒரே வழி ‘இனி ஒரு விதி செய்வோம்’ என்பதே. அவ்வழி புதிய வழி. அனைவரையும் வாழ வைக்கும் வழியாகும்!

வேற்றுமையற்ற – மாறுபாடற்ற இனிய சமூகம், இணக்கமான சமூகம், வெறுப்பற்ற சமூகம் காண வேண்டுமென கர்ஜித்தான்.

“எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்,
எல்லாரும் ஓர்நிறை எல்லோரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – வாழ்க!”

இது பாரதியின் முழக்கம். அவனது முழக்கம் கற்பனை கனவல்ல. அதுவே நிஜம்.

நிஜம் வெற்றி பெற வேண்டும். அதனை நோக்கி மக்கள் அணிவகுக்க வேண்டும். அவர்கள் அணிவகுக்க உண்மைகள் அறிய வேண்டும். உண்மைகள் அறிய, தெரிய, புரிய, விழிப்புணர்வு காண நாம் அவர்களை நோக்கி நடை பயணம் மேற்கொள்ள வேண்டும்.

ஒன்றியத்தில் ஆள்வோரின் மக்கள் விரோத கொள்கைகளை உலகறிய செய்திடல் வேண்டும்!

142 கோடி மக்கள், 284 கோடி கரங்களை கொண்ட மக்களாவர்!

கரத்தாலும் கருத்தாலும் அவர்கள் செலுத்தும் உழைப்பு அனைத்தும் அதானிக்கு அல்ல! அம்பானிக்கு அல்ல! இவர்களைப் போன்ற மோடியின் நண்பர்களுக்கு அல்ல. மாறாக நாட்டிற்கு, நாட்டு மக்களுக்கு சொந்தமானது!

அதனை உறுதிப்படுத்தி, உத்திரவாதப்படுத்திட இல்லம் தோறும் செல்வோம்! இன்முகங்காட்டி மக்களிடம், நமது துன்ப துயரங்கள் அனைத்துக்கும், மோடி அரசின் கொள்கைகள் காரணமாக இருப்பதை விளக்குவோம். மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்



# மதவெறி, கார்ப்பரேட் ஆதரவு மோடி அரசை வீழ்த்துவோம்!

## கோவையில் அமர்ஜித்கவுர் முழக்கம்!

**கோவை மாவட்டக் குழுவின் சிறப்பு பேரவைக் கூட்டம், ஏப்ரல் 22ல் தமிழ்நாடு ஏஐடியூசி செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.**



கூட்டத்தில் அகில இந்திய பொதுச் செயலாளர் அமர்ஜீத் கவுர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

“தொழிலாளி வர்க்கம், உழைக்கும் மக்கள் ஆட்சிக்கு வரவேண்டும் அப்போதுதான் ஒவ்வொரு தொழிலாளிக்கும் கல்வி சுகாதாரம் மருத்துவம் உட்பட அடிப்படைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும் என்பதை உலகத்திற்கு உணர்த்திவர் மாமேதை லெனின்.1886 இல் சிக்காகோ தியாகிகள் சிந்திய ரத்தத்தில் மலர்ந்தது தியாக செங்கொடி.. இந்தியாவில் முதல்முறையாக மே தினத்தை கொண்டாடியவர் தமிழ்நாட்டில் பிறந்த சிந்தனை சிற்பி சிங்காரவேலர். எட்டு மணி நேர வேலைக்கு குரல் எழுப்பிய தினம் தான் மே தினம். உரிமைகளை பெறுவதற்காக தொழிலாளி வர்க்கம் நடத்திய போராட்டங்கள் ஏராளம்.

எட்டு மணி நேரம் வேலை, எட்டு மணி நேரம் ஓய்வு உறக்கம், எட்டு மணி நேரம் குடும்பத்தோடு வாழ்வது என்பதற்கான உரிமைப் போராட்டத்தின் விளைவு தான் மே தினம்.

பிஜேபி யின் சதி செயல்களை முறியடிப்பதற்கு ஒன்றுபட்டு போராட்டங்களை நாம் நடத்த வேண்டும்.

பழைய பென்ஷன் திட்டம் வேண்டும் என்று நாம் கூறுகிறோம். 1995ம் வருடம் கொண்டுவரப்பட்ட வருங்கால வைப்பு நிதி பென்ஷன் திட்டத்திற்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. உழைக்கும் மக்களில் 50 கோடி பேருக்கு மேல் எந்த பென்ஷன் திட்டமும் இல்லாமல் தவிக்கிறார்கள். சாதாரண மக்களின் சேமிப்புக்களும் சொத்துக்களும் தேசத்திற்கு சொந்தமானவை. இவைகளை சூறையாடுகின்ற கொடுமைகளை அனுமதிக்க மாட்டோம்.

காணும் செல்வங்களை எல்லாம் உழைக்கின்ற மக்கள்தான் உருவாக்கினோம். இந்த தேசத்தின் போக்குவரத்து அனைத்தையும் நடத்துவது தொழிலாளி வர்க்கம்தான்.

எதையுமே செய்யாத ஒன்றிய பிஜேபி அரசு மக்களுடைய பணத்தை சூறையாடுகிறது.

இந்தியாவில் கார்ப்பரேட் முதலாளிகள் எப்படி திடீரென்று வளர்ந்தார்கள்? மோடி யினுடைய அரசு இவர்களுக்கு நாட்டின் பொது சொத்துக்களை தாராளமாக தாரை வார்த்தது.. நமக்கு வீடு,நிலம், இடம், வேலை பணம் எதுவும் இல்லை. வங்கிகளில் நாம் கடன் கேட்டால் கொடுக்க மறுக்கின்றார்கள். அதானியும் கார்ப்பரேட் பெரும் முதலாளிகள் வளர்வதற்கு இந்திய நாட்டின் சொத்துக்கள் தாராளமாக வாரி வழங்கப்பட்டுள்ளன.

பெரும் முதலாளிகளுக்கு 15 லட்சம் கோடி ரூபாய்கள் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. செல்வந்தர்களிடம் எண்ண முடியாத அளவுக்கு செல்வம் பெருகுவதும், ஏழைகள் மேலும் பரம ஏழைகள் ஆவதும் பெருகி உள்ளது. வறுமைக் கோட்டிற்கு கீழே 72 கோடி மக்கள். இருக்க இடமின்றி வாழ வகையின்றி தவிக்கிறார்கள். .உலக பொருளாதார வளர்ச்சியில் ஐந்தாவது இடத்தில் இருக்கின்றோம் என்று சொல்லுகின்ற மோடி அரசு, வறுமை நிலையில் 132 வது இடத்தில் கடைக்கோடியில் கிடப்பதை சொல்லவில்லை.

உலகின் தற்கொலைகளில் 25 சதவீதம் இந்தியாவில் தான். கூலி வேலை செய்கின்ற மக்கள் இரவு நேர உணவின்றி படுக்கின்ற அவலம் இந்தியாவிலே தான். மக்கள் உயிரோடு வாழ்வதற்கே போராட வேண்டும்.

மக்கள் தொகையில் 3%ஆக இருக்கும் பெரும் செல்வந்தர்களின் கையில், இந்திய நாட்டின் மொத்த சொத்துகளில் 54% இருக்கிறது.

இந்த செல்வந்தர்களின் வரி விகிதங்கள் குறைக்கப்படுகின்றன. இவர்களுக்கு வெறும் இரண்டு சத வரிதான். ஆனால் சாமானியர்கள் 28 சதம் வரை வரி கட்டுகிறோம்.

சலுகை வரும் பெரு முதலாளிகள் இந்த அரசை ஒருபுறம் இயக்குகிறார்கள் என்றால் மறுபுறம் வகுப்பு வெறியை தூண்டி விடுகின்ற ஆர்.எஸ்.எஸ்.தான் அரசாங்கத்தில் முடிவுகள் அனைத்தையும் தானே எடுத்து செயல்படுத்துகிறது. இந்துத்துவா என்ற பெயரில் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல கம்யூனிஸ்டுகளையும் குறிவைத்து தாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். தூண்டி விட்டு மதக்கலவரங்கள், சாதி சண்டைகளை நடத்துகிறார்கள்.

தொடர்ச்சி 10 ம் பக்கம்

# பிரிக்ஸ் ப்ளஸ்... புதிய உலகு ஒழுங்குமுறை



மு.வீரபாண்டியன்

**தொடரும் ரஷ்ய உக்ரைன் போர் உலகம் அறிந்ததே. உலகம் போர் என்று கூறினாலும் ரஷ்ய அதனை போர் அல்ல சிறப்பு ராணுவ நடவடிக்கை என்கிறது.**



போருக்கான காரணம் உலகம் அறிந்தது தான்.

1.மின்ஸ்க்ஒப்பந்தத்தை உக்ரைன் மீறியது. (நேட்டோவுக்கும் இதில் பங்குண்டு.)

2. புதியவகை நாஜிகளால் உக்ரைனில், ரஷ்யர்கள் கொல்லப்பட்டது.

3. உக்ரைன் நேட்டோவில் சேர முடிவு செய்தது.

போர்துவங்கிவிட்டது.ஒருவருடத்தையும் கடந்து விட்டது.போரை முடிவுக்கு கொண்டு வர ஐ.நா.சபை எடுத்த ஆக்கப்பூர்வமான நடவடிக்கை என்ன? மனிதகுலத்தின் இந்தக் கேள்வியை கடந்து சென்றுவிட முடியாது. சரி, உலக ஆதிக்க நாடுகள் ஜி 7 போரை முடிவுக்கு கொண்டுவர என்ன செய்தது? அதுதான் போரை தூண்டி நடத்துகிறது என்பதுதான் அதிர்ச்சியளிக்கிறது.

ரஷ்ய உக்ரைன் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டுமென இந்தியா கூறுகிறது, சீனா கூறுகிறது. ஆனால் ஐரோப்பா கூறுகிறதா? அமெரிக்கா கூறுகிறதா? இல்லை. காரணம் போர் நடக்க வேண்டும், அது தொடர வேண்டும் என அமெரிக்காவும், ஐரோப்பாவும் விரும்புகிறது. காரணம்

1. ரஷ்ய பலவீனப்பட வேண்டும்.

2. போரில் ஆயுதங்களின் திறன் அறியப்பட வேண்டும்.

3. ரஷ்ய ஆதிக்கம் எனக் கூறி நேட்டோவை வலுப்படுத்த வேண்டும்.

ஆக ரஷ்யாவை பலவீனப்படுத்த முதற்கட்ட பொருளாதார தடை எனத் துவங்கி ஏழுகட்ட பொருளாதார தடை விதித்து விட்டார்கள். கியூபா, லிபியா, ஈராக் போல் ரஷ்யா தடுமாறும் என தப்புக் கணக்கு போட்டுவிட்டது அமெரிக்கா. ரஷ்யாவின் பொருளாதாரம், எண்ணை எரிவாயு மற்றும் விண்வெளி இராணுவ தொழில்நுட்பத்தில் அடங்கியுள்ளது. எனவே, ரஷ்யா மீது போடப்பட்ட பொருளாதார தடைகள் ஐரோப்பாவையே பெரிதும் பாதித்து விட்டது. போரை மிக எளிதில் முடிவுக்கு கொண்டு வந்திருக்க முடியும்.

உக்ரைனை நேட்டோவில் இணைக்க மாட்டோம் என்று உறுதி கூறியிருக்க வேண்டும். உக்ரைன் நாடும் சூழலைப் புரிந்து நேட்டோவில் இணைய மாட்டோம் என கூறியிருக்க வேண்டும். இரண்டும் நடைபெறவில்லை. இந்நிலையில்தான் ரஷ்யா மிக முக்கிய அறிவிப்புகளை வெளி யிட்டுள்ளது.

1. பேச்சுவார்த்தைக்கு எப்பொழுதும் ரஷ்யா தயார்.

2. உக்ரைன் நேட்டோவுக்கு இணங்கக் கூடாது.

3. நேட்டோ உக்ரைனுக்கு தொடர்ந்து ஆயுதங்களை கொடுத்தால் அணு ஆயுதப் போர் தவிர்க்க இயலாது. இதை விட மிக முக்கியமான அறிவிப்பு என்பது ‘பிரிக்ஸ் ப்ளஸ்’ அதுபோல் புதிய உலகு ஒழுங்குமுறை என்பது. பிரிக்ஸ் என்பது இந்தியா, சீனா, ரஷ்யா, பிரேசில், தென் ஆப்பிரிக்கா எனும் கூட்டமைப்பு. இதில் ப்ளஸ் என்பது ஈரான், சவுதி போன்ற நாடுகளை இணைப்பது.

புதிய உலகு ஒழுங்குமுறை என்பது வர்த்தகம், இராணுவம், தகவல் தொழில்நுட்பம் என யாவற்றிலும் ஒரு நாட்டின் ஆதிக்கத்தை முடிவுக்கு கொண்டு வருவது.

1. வர்த்தகம், அமெரிக்க, ஐரோப்பிய நலன்களால் பிணைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒரு முடிவு வேண்டும். இனி பிரிக்ஸ் ப்ளஸ் வர்த்தகத்திற்கு டாலரைப் பயன்படுத்தாது. அவரவர் நாணயத்தை பயன்படுத்தி கொள்ளலாம்.

2. உலகில் பிற நாடுகளில் அமெரிக்க, நேட்டோ இராணுவ முகாம்கள் களைக்கப்பட வேண்டும். ஜி 7 கலைக்கப்பட வேண்டும்.

3. உலக நிதிமுறைமைகளில் அமெரிக்க, ஐரோப்பிய மேலாதிக்கம் முடிவுக்கு வரவேண்டும். பிரிக்ஸ் ப்ளஸ் ஒரு புதுவகைப்பட்ட நிதிமுறைகளை உருவாக்க வேண்டும்.

4. அறிவியல், விண்வெளி, தொழில்நுட்ப முறைமைகளை வளர்முக நாடுகளோடு பகிர்ந்து கொள்வதுதான் புதிய உலகு ஒழுங்குமுறையின் சாரம். இந்தியா உள்ளிட்ட வளர்முக நாடுகளும், ஒடுக்கப்பட்ட நாடுகளும் இதனை வரவேற்கின்றன.

புதிய உலக ஒழுங்குமுறை எழுக!

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 04

# மல்யுத்த வீராங்கனைகளும், ராகுல்காந்தியும்

வங்கிகளில் பல ஆயிரம் கோடி ரூபாய்களை கடனாக வாங்கி, திரும்பச் செலுத்தாமல் வெளிநாடுகளுக்கு ஓடிப்போன நீரவ் மோடி, லலித் மோடி உள்ளிட்டவர்களை பற்றி ராகுல் காந்தி விமர்சித்துப் பேசினார். மோடி என்ற சாதியை இழிவு படுத்தி விட்டதாக கூறி மார்ச் 23ஆம் தேதி அன்று சூரத்தில் உள்ள கீழமை நீதிமன்றம் இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை விதித்தது.

அதையே காரணம் காட்டி அன்று மாலையே அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டது. உடனடியாக அரசு வழங்கியிருந்த வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

இதை எதிர்த்து சூரத் செசன்ஸ் கோர்ட்டில் அவர் செய்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. ஏற்கனவே 2006ல் போலி என்கவுண்டரில் தனக்கு வேண்டாதவர்களை கொலை செய்ததாக, இப்போதைய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா மீது கொலை வழக்கு நடந்தது. அதில் அமித்ஷாவுக்காக ஆஜரான வழக்கறிஞர்தான் இப்போது செசன்ஸ் கோர்ட் நீதிபதி. தீர்ப்பு வேறு மாதிரி இருக்க முடியாது.

குஜராத் உயர் நீதிமன்றத்தில் அடுத்த மேல்முறையீட்டை ராகுல் காந்தி தாக்கல் செய்தபோது, உயர் நீதிமன்ற நீதிபதி கீதா கோபி சிறிது நேரம் வழக்கறிஞர்கள் வாதாடியதை கேட்டார். உடனடியாக வழக்கை தலைமை நீதிபதிக்கு அனுப்பி, வேறு நீதிபதியிடம் விசாரணைக்கு அனுப்புமாறு உயர் நீதிமன்ற பதிவாளருக்கு உத்தரவிட்டார். மோடி சாம்ராஜ்யத்தில், நீதிபதி நீதியைக் காப்பாற்றுவதை விட, தன்னை காப்பாற்றிக் கொள்வது முக்கியம் என்று கருதும் அளவுக்கு அச்சுறுத்தல் உள்ளது. நீதிபதி தன்னைக் காப்பாற்றிக் கொண்டார்.

டெல்லியில் மல்யுத்த வீரர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். அவர்கள் ஆசிய அளவிலும் ஒலிம்பிக்கிலும் பதக்கங்களை வாங்கியவர்கள். மல்யுத்த வீரர்கள் கூட்டமைப்பின் தலைவராக இருக்கிற பிரிஜ் பூஷன், மல்யுத்த வீராங்கனைகளை பாலியல் துன்புறுத்தல் செய்தார். அவருக்கு அவரை போஸ்கோ சட்டப்படி கைது செய்ய வேண்டும்; தலைவர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்பது கோரிக்கை.

சென்ற ஜனவரியிலேயே அவர்கள் போராடினார்கள். அரசாங்கம் புகழ்பெற்ற மல்யுத்த வீராங்கனை மேரி கோம் தலைமையில் ஒரு விசாரணைக் குழுவை போட்டது.

அந்தக் குழு பாலியல் புகார்கள் குறித்து விசாரித்தது. தனது அறிக்கையில் "அந்தக் கூட்டமைப்பு நிர்வாகத்தில், சட்டப்படி பாலியல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான உள்ளக புகார் குழு இதுவரை அமைக்கப்படவில்லை. குறைகளை களைவதற்கான குழுவும் அங்கு இல்லை. போட்டியாளர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதைப் பற்றி வெளிப்படைத்தன்மை இல்லை. மல்யுத்த வீரர்களுக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் சரியான தகவல் தொடர்பும் இல்லை" என்று கூறி இருக்கிறது.

சொன்ன தேதியைத் தாண்டி அறிக்கை கொடுத்துவிட்டது என்று சொல்லி, அந்த குழுவைக் கலைத்து விட்டார்கள். விசாரணை குழுவின் அறிக்கையை வெளியிடவுமில்லை நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பாஜக எம்.பி. பிரிஜ் பூஷன் மிகவும் வலிமை வாய்ந்த ஆள். ஆறு முறை நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவர். மல்யுத்த வீரர்களை தேர்ந்தெடுப்பது, போட்டிக்கு அனுப்புவது, அதிகாரிகள் நியமிப்பது அனைத்திலும் அவர் சொல்வதுதான் சட்டம். பாபர் மசூதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர். அதைப் பெருமையாகச் சொல்லிக் கொள்பவர்.

கூட்டமைப்புக்கு தேர்தல் வருகிறது. அவர் மூன்று முறை தலைவராக இருந்துள்ளதால், அடுத்த முறை இருக்க முடியாது. எனவே அவரது மகன் ஏற்கனவே தயார் செய்யப்பட்டிருக்கிறார்.

அதே நேரத்தில் ஜனவரியிலேயே புகார் செய்திருந்தும் இன்னும் காவல்துறையில் எஃப்.ஐ.ஆர் போட மறுக்கிறார்கள். ஏழு பெண்கள் புகார் கொடுத்துள்ளனர். அதில் ஒருவர் 16 வயதிற்கும் கீழான சிறுமி. டெல்லியில் அவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் அரசு தந்த வீட்டில் தான் இந்த பாலியல் துன்புறுத்தல்கள் நடத்தப்பட்டுள்ளன.

கடைசியில் உச்ச நீதிமன்றம் வரை சென்று, இப்போதுதான் எஃப்.ஐ.ஆர் போட வேண்டும் என உத்தரவு பெற்று இருக்கிறார்கள்.

பதக்கம் வென்ற வீராங்கனைகளை பாலியல் ரீதியாக சிதைத்த ஒரு குற்றவாளி மீது எஃப் ஐ ஆர் கூட போட முடியாது. ஆனால் நாடறிந்த தலைவர் ராகுல் காந்திக்கு இட்டுக் கட்டிய குற்றத்திற்காக சிறைத் தண்டனை. மேல்முறையீட்டை விசாரிக்க உயர் நீதிமன்றம் அச்சப்படும். ஆர்.எஸ்.எஸ். ஆட்சியில் இந்தியாவின் நீதித்துறை பரிதாப நிலையில் உள்ளது.

நடைபயண இயக்கத்தில் ஜனநாயக நிறுவனங்கள் அனைத்தையும் மோடி அரசு ஹிட்லரை போல சிதைத்து முடித்து இருக்கிறது. அதன் ஆட்சியை முடித்து வைப்பது மக்களின் கடமை என்பதை விரிவாக எடுத்துச் சொல்வோம்!

தொழிற்சாலைகள் சட்ட திருத்த மசோதாவை ரத்து செய்யக் கோரி

# தமிழ்நாடு முழுவதும் ஏஐடியுசி ஆர்ப்பாட்டம்




தமிழ்நாடு அரசின் தொழிற்சாலைகள் சட்ட திருத்த மசோதாவை உடனடியாக ரத்து செய்யக் கோரியும், பல்லாண்டு காலம் போராடி பெற்ற 8 மணி நேர வேலையை 12 மணி நேரமாக உயர்த்துகிற தொழிலாளர் விரோத போக்கை கண்டித்தும் ஏஐடியுசி தொழிற்சங்கத்தின் சார்பில் மாநிலம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**சென்னை:** வட சென்னை, தென்சென்னை, மத்திய சென்னை சார்பில் சென்னை ஆட்சியர் அலுவலகம் அருகில் ஆர்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு ஏஐடியுசி தேசிய செயலாளர் டி.எம்.மூர்த்தி, மாநில பொதுச் செயலாளர் எம். இராதாகிருஷ்ணன் ஆகியோர் தலைமை தாங்கினர்.

**கோவை:** கோவை மத்திய தந்தி அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஏஐடியுசி மாநில செயலாளர் எம். ஆறுமுகம் தலைமை தாங்கினார்.

மாவட்ட பொதுச் செயலாளர் சி. தங்கவேல், சி.சிவசாமி, பி.மௌனசாமி, கட்டிட தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் என்.செல்வராஜ் உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

**தூத்துக்குடி:** தூத்துக்குடியில் இ.கிருஷ்ணராஜ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏஐடியூசி மாநில தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன் கண்டன உரை நிகழ்த்தினார்.

**ஈரோடு:** ஈரோட்டில் ஏஐடியுசி மாநில செயலாளர் எஸ்.சின்னசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிபிஐ ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.டி.பிரபாகரன் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஏஐடியுசி மாநிலச் செயலாளர் ஆர்.தில்லைவனம் தலைமை வகித்தார். தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி.சந்திரகுமார் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

**கள்ளக்குறிச்சி:** கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட பொருளாளர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார். மாநில நிர்வாக குழு உறுப்பினர் வளர்மதி துவக்கி வைத்து பேசினார்.

**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஏ.பிரகாசம் தலைமை தாங்கினார். எல்.தங்கராஜ் முன்னிலை வகித்தார். ஏஐடியுசி காஞ்சி மாவட்ட பொதுச் செயலாளர் ஏ.மூர்த்தி கண்டன உரையாற்றினார்.

**தென்காசி:** தென்காசியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட ஏஐடியூசி பொதுச் செயலாளர் டி.சுப்பையா தலைமை தாங்கினார்.

சிபிஐ மாவட்ட செயலாளர் டி.இசக்கித்துரை, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் எம்.முனியாண்டி உட்பட பலர் கலந்து கொண்டனர்

**செங்கல்பட்டு:** செங்கல்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரியில் மாவட்ட பொதுச் செயலாளர் எம்.ஜஹாங்கீர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநில துணை தலைவர் எம்.சங்கையா ஆர்ப்பாட்டத்தை துவக்கிவைத்து பேசினார்.

**நாமக்கல்:** நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் அண்ணா சிலை முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஏஐடியுசி மாவட்ட தலைவர் எஸ்.ஜெயராமன் தலைமை வகித்தார்

சிபிஐ மாவட்ட செயலாளர் கே. அன்புமணி, ஏஐடியுசி மாவட்ட பொதுச்செயலாளர் பி.தனசேகரன், பி.எஸ்.என்.எல். மாவட்ட செயலாளர் எஸ்.சின்னசாமி ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

**அரியலூர்:** அரியலூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் டி.தண்டபாணி கண்டன உரையாற்றினார்.

**கன்னியாகுமரி:** குமரி மாவட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் எஸ்.அனில்குமார் தலைமை தாங்கினார். ஏஐடியுசியின் குமரி மாவட்ட செயலாளர் ஜி.சுரேஷ் மேசியதாஸ் உள்ளிட்ட திரளான தோழர்கள் கலந்து கொண்டனர்.

**மயிலாடுதுறை:** மயிலாடுதுறையில் கே.ராமன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிபிஐ மாவட்ட செயலாளர் சீனிவாசன், ஏஐடியுசி மாநில குழு உறுப்பினர் ராஜமோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**திருச்சி:** திருச்சி மாவட்டம், மணப்பாறையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு திருச்சி மாவட்ட உள்ளாட்சி தொழிலாளர்கள் மாவட்ட துணைச் செயலாளர் காமாட்சி தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் த.இந்திரஜித், சிபிஐ நகர செயலாளர் ஜனசக்தி உசேன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

**மதுரை:** மதுரையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஏஐடியூசி மாவட்ட தலைவர் எம்.நந்தாசிங் தலைமை தாங்கினார். சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர் சி.தாமஸ், ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் கே.சேது உள்ளிட்ட ஏராளமான தோழர்களும் பங்கேற்றனர்.

# இடதுசாரிக் கொள்கைகளுக்கு ஆதரவு



இடதுசாரிக் கொள்கைகளை முன்னிறுத்தி மெக்சிகோவின் ஜனாதிபதியாகப் பணியாற்றி வரும் ஆம்லோ(ஆண்ட்ரூஸ் மானுவல் லோபஸ் ஓப்ரடார்) மக்கள் மத்தியில் பெரும் ஆதரவைப் பெற்றிருக்கிறார் என்று கருத்துக் கணிப்பில் தெரிய வந்துள்ளது.

அமெரிக்கப் பகுதிகளில் பல்வேறு நாடுகளில் இடதுசாரிக் கொள்கைகளை முன்னிறுத்திய தலைவர்கள் ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டு வருகிறார்கள். அதில் மெக்சிகோவும் ஒன்றாகும். அனைத்து இடதுசாரித் தலைவர்களைப் போலவே, ஆம்லோவும் நாட்டின் இயற்கை வளங்களை அரசின் வசம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார். அதே வேளையில், அதை சட்டப்பூர்வமாகவும், மக்களின் ஆதரவோடும் செய்து வருகிறார். மெக்சிகோ மக்கள் மத்தியில் அவருக்குள்ள ஆதரவு அதிகரித்துள்ளது.

நாட்டின் தலைநகர் மெக்சிகோ சிட்டி உள்ளிட்ட 75 நகரங்களில் கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல்வேறு வினாக்களைத் தொடுத்து ஆம்லோவின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்திருக்கிறார்கள். பூஜ்ஜியம் என்றால் சுத்தமாக நம்பிக்கை இல்லை என்றும், பத்து என்றால் முழு மையாக நம்புவதாக அர்த்தம் என்றும் வைத்திருக்கிறார்கள். 50.9 விழுக்காட்டினர் 8 முதல் 10 புள்ளி களைக் கொடுத்திருக்கிறார்கள். 16.9 விழுக்காட்டினர் 6 முதல் 7 புள்ளிகளைத் தந்துள்ளனர். 14.1 விழுக்காட்டினர் 4 முதல் 5 புள்ளிகளும், 17.6 விழுக்காட்டி னர் 0 முதல் 3 புள்ளிகள் வரையில் கொடு த்துள்ளனர். முழுமையான நம்பிக்கை உள்ளவர்களே 50 விழுக்காட்டுக்கு மேல் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க தாகும். தேசிய புள்ளியியல் மற்றும் புவியியல் மையம் இந்த ஆய்வை மேற்கொண்டது.



த.லெனின்

# ஆருத்ரா ரூ.2,400 கோடி நிதி மோசடி! நிர்வாகிகளை பாதுகாக்கிறதா பா.ஜ.க.?




**யோக்கியன் வர்றான் சொம்பை எடுத்து உள்ளே வை என்பது பழமொழி! திமுகவின் ஊழல்களை வெளியிடுவதாக அறிவித்த பாஜகவின் மாநிலத் தலைவர் அண்ணாமலை தனது சொந்த கட்சியில் ஊழல்வாதிகளை, குற்றவாளிகளை அதுவும் மக்களை ஏமாற்றி நிதி முறைகேடுகளில் ஈடுபட்டவர்களை, சேர்த்து, அவர்களை காப்பாற்றி புனிதப்படுத்தும் அரசியல் பாதையில் பயணிக்கிறார்.**

இப்படி, சிக்கியவர்கள்தான் ஆருத்ரா நிறுவனத்தின் நிர்வாகிகள். ஆருத்ரா என்ற ஆன்மீகப் பெயரில் இயங்கினால் மக்களிடம் நம்பிக்கை ஏற்படும் என்ற எண்ணத்தில் இந்த நிதி நிறுவனத்தை உருவாக்கி உள்ளனர்.

இதில் ஒரு லட்சம் ரூபாய் முதலீடு செய்தால், ஒவ்வொரு மாதமும் ரூ.30 ஆயிரம் வட்டி அல்லது அதற்கு ஈடான தங்கம் தருகிறோம் என்று ஆசை காட்டி ரூ.2400 கோடியை ஆருத்ரா நிறுவனம் திரட்டி உள்ளது.

ஆனால், அவர்கள் உறுதி அளித்தபடி வட்டியோ, தங்கமோ தரவில்லை. இதனால் பிரச்சினை வெடித்தது. அதிர்ச்சியடைந்த முதலீட்டாளர்கள், முதலுக்கே மோசம் வந்துவிடும் என காவல் துறையை நாடினர்.

பொருளாதார குற்றங்களை தடுக்கும் குற்ற பிரிவுக்கு இந்த வழக்கு மாற்றப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த பத்து மாதங்களாக தலைமறைவாக இருந்த ஜே.மாலதியை பொருளாதார குற்றப்பிரிவு காவல்துறையினர் கைது செய்துள்ளனர். இவர் முதலீட்டாளர்களின் சுமார் ரூ.210 கோடி பணத்தை காஞ்சிபுரத்தில் முதலீடு செய்திருப்பது தெரிய வந்துள்ளது.

அவர் தனது உறவினர்கள் 30 பேர்களின் பெயரில் இந்த சொத்துகளை வாங்கியிருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இவர் பாஜகவின் வேலூர், காட்பாடி கிளையின் பொறுப்பாளர்!

தமிழில் திருவாதிரை என்பதுதான் வடமொழியில் ஆருத்ரா என்று அழைக்கப்படுகிறது. மார்கழி மாதம் பௌர்ணமி தினத்தன்று சிவபெருமானுக்கு சிறப்பு தரிசனங்கள் நடத்தப்படுகின்றன.

இதன் மூலம் பாவங்கள் நீங்கி புண்ணியம் பெருகும் என்பதுதான் ஆன்மீகவாதிகளின் எண்ணம்.

ஆனால் ஆருத்ரா பெயரில் அமைந்த இந்த நிதி நிறுவனம் பாவங்களை மட்டுமே சேர்த்து இருக்கிறது.

கட்டுக் கட்டாக ஆதார ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு இருக்கின்றன. 18 கிலோவுக்கு மேல் தங்க கட்டிகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. இந்த நிறுவனத்தின் இயக்குநர்கள், அவர்களின் உறவினர்கள் பெயரில் பினாமியாக சொத்துக்கள் வாங்கப்பட்டிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

ஆருத்ரா நிறுவனத்தின் இயக்குநர்களின் ஒருவரான கே.ஹரிஷ் பொருளாதார குற்றப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் தமிழ்நாடு பா.ஜ.க. விளையாட்டு பிரிவு செயலாளர்.

கே.ஹரிஷ் கடந்த 2022, ஜுன் 2 ஆம் தேதி பா.ஜ.க.வின் விளையாட்டுப் பிரிவின் மாநிலச் செயலாளராக நியமிக்கப்பட்டார். இந்த நியமனத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே பொருளாதார குற்றப்பிரிவு கே.ஹரிஷ் மீது வழக்கு பதிவு செய்து தேடிக் கொண்டிருந்தது.

செப்டம்பர் 2020 முதல் மே 2022 வரை முதலீட்டாளர்களிடமிருந்து டெபாசிட்டாக பெரும் தொகை திரட்டப்பட்டிருக்கிறது. இந்த டெபாசிட் தொகைக்கு 25 முதல் 30% வட்டி தருவதாக கூறி, கோடிக்கணக்கான ரூபாயை முதலீடாக திரட்டி மோசடி செய்திருக்கிறார்.

மோசடி வழக்குக்கு பதிவு செய்யப்பட்டுள்ள கே. ஹரிசுக்கு பதவி கொடுப்பதில் அமர்பிரசாத் ரெட்டி மிகுந்த அக்கறை காட்டியிருக்கிறார்.

முதலீட்டாளர்களை ஹரிஷ் மோசடி செய்துள்ளாரே என்று பத்திரிகையாளர்கள் அமர்பிரசாத் ரெட்டியிடம் கேட்ட போது, "இது ஒரு பழிவாங்கும் நடவடிக்கை. அவர் விளையாட்டுத்துறையில் மிகச் சிறந்த வல்லவர், அவர் எந்த குற்றத்தையும் செய்யவில்லை" என்று ஒரு மோசடி பேர்வழியை பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

இப்படி மக்கள் பணத்தை மோசடி செய்தவர்களை பா.ஜ.க. ஏன் கட்சியில் சேர்க்கிறது? ஏன் பாதுகாக்கிறது? மோசடி குற்ற வழக்குகளில் சம்மந்தப்பட்ட கே.ஹரிஷ் என்பவருக்கும், தமிழக பா.ஜ.க. தலைமைக்கும் உள்ள உறவு குறித்து விளக்க வேண்டிய பொறுப்பு அதன் தலைவர் அண்ணாமலைக்கு இருக்கிறது. இதற்கான உரிய விளக்கத்தை அவர் வெளியிடுவாரா?

பொதுவாக வங்கிகள் தங்களது வாடிக்கையாளர்களின் வைப்புத் தொகைக்கான வட்டி விகிதத்தை குறைத்ததும், மக்கள் தங்கள் வைப்பு தொகைக்கு அதிக வட்டி வேண்டும் என விரும்புவதும் இது போன்ற நிதிநிறுவன மோசடிகளுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

பொதுத்துறை வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கான வைப்புத் தொகை வட்டி விகிதத்தை உயர்த்த வேண்டும். அதன் மூலம் நியாயமான தொகைகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். அத்தோடு முறைகேடாக இயங்கும் இது போன்ற நிதி நிறுவனங்களை கட்டுப்படுத்த சட்ட விதிகளையும், ரிசர்வ் வங்கி விதிமுறைகளையும் கடுமையாக்கி, மக்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.


தொடர்புக்கு: 94444 81703

# ஆபத்தில் லட்சக்கணக்கான குழந்தைகளின் உயிர்கள்

சூடானில் இருதரப்புக்கும் இடையிலான சண்டை தீவிரமாக வருவதால் அந்நாட்டில் உள்ள லட்சக் கணக்கான குழந்தைகள் ஆபத்தான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று ஐ.நா. அமைப்புகளில் ஒன்றான யுனிசெப் எச்சரித்துள்ளது. கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக, சூடானில் ராணுவத்திற்கும், துணை ராணுவப் படைகளுக்கும் இடையில் மோதல் நடைபெற்று வருகிறது. நான்கு முறை போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டும் அவை நடைமுறைக்கு வரவில்லை.

சர்வ தேச சமூகத்தின் வேண்டுகோள்களை மோதி வரும் ராணுவம் மற்றும் துணை ராணுவம் ஆகிய இரண்டுமே காதில் போட்டுக் கொள்ள மறுக்கின்றன.

மோதல் அதிகரித்து வருவதால் குழந்தைகள் பெரும் ஆபத்தான சூழலில் வாழ்ந்து கொண்டிருக் கின்றன என்று யுனிசெப் செயல் இயக்குநர் காதரின் ரஸ்ஸல் ஒரு அறிக்கை மூலமாகத் தெரிவித்துள்ளார். சண்டை தொடங்கியதில் இருந்து இதுவரையில் ஒன்பது குழந்தைகள் கொல்லப் பட்டுள்ளன. 50க்கும் மேற்பட்ட குழந்தைகள் காயமடைந்துள்ளன. பாதுகாப்பான இடங்கள் இல்லாமல் இந்தக்



குழந்தைகள் தவித்துக் கொண்டிருக்கின்றன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரஸ்ஸல் அறிக்கையில், "பள்ளிக் கூடங்களிலும், நல மையங்களிலும் குழந்தைகள் தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த இடங்களைச் சுற்றிலும் சண்டை நடை பெற்று வருகிறது. குழந்தைகளுக்கான மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டிருந்த குழந்தைகள், அங்கிருந்து பாதுகாப்பான இடங் களுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக் கின்றன.

அந்த மருத்துவமனை களுக்கு அருகில் குண்டுகள் வீசப் பட்டதே அதற்குக் காரணமாகும். பல மருத்துவமனைகள், சுகாதார மையங்கள் மற்றும் முக்கியமான கட்டமைப்புகள் குண்டுவீச்சால் அழிக்கப்பட்டுவிட்டன" என்று கூறியுள்ளார்.

# மும்பையில் மீண்டும் ஒரு மதநல்லிணக்க நிகழ்வு

மகாராஷ்டிரா மாநிலம் மும்பை உள்நாட்டு விமான நிலைய முனையத்திற்கு அருகிலுள்ள வாகன நிறுத்துமிடத்தில் ஏர்போர்ட் ஏவியேஷன் எம்ப்ளாயீஸ் யூனியன் (ஏஏஇயு) சார்பில் இப்தார் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த இப்தார் விருந்தில் மும்பையின் அனைத்து மூலைகளிலிருந்தும், அனைத்து மதங்களையும் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட ஓட்டுநர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

அனைத்து மத ஓட்டுநர்களும் கூட்டாக இப்தார் சடங்குகளையும் செய்து, உறவினர்கள் போன்று நலம் விசாரித்து பாடலுக்கு ஏற்ப நடனமாடி ஆரவாரம் செய்ததால் உள்நாட்டு விமான நிலைய முனைய வாகன நிறுத்துமிடம் பிரம்மாண்ட திருவிழா போன்று களைகட்டியது.

இப்தார் விருந்தில் கலந்து கொண்ட ஓட்டுநர் ஒருவர் 'சப்ரங் இந்தியா' இணைய இதழின் செய்தி யாளரிடம் தன் பிறப்பால் பிராமணர் என்று அடையாளப்படுத்திக் கொண்டு கூறியதாவது:

நான் ஒரு பிராமணன். இது என் வீட்டிற்குள்ளும், என் தனிப்பட்ட வாழ்விலும் மட்டுமே தவிர, வெளியே அதாவது இங்குள்ள எல்லோரையும் (ஓட்டுனர்களையும்) போல ஒரு சாதாரண மனிதன்தான். ஆனால் பிரிவினை அரசியல்தான் நம்மை பிரிக்கிறது". இவ்வாறு அவர் கூறினார்.

நவி மும்பையில் உள்ள கார்கரில் இருந்துவந்த சீக்கிய ஓட்டுநர்கள் அனைத்து மதத்தினரின் இப்தார் விருந்து முயற்சிக்கு பாராட்டு தெரிவித்தனர். அதில் ஒருவர் "குடிமக்களிடையே பரவலான ஒற்றுமை இருக்கும்போது சிலர் செயற்கையான பிளவை உருவாக்க விரும்புகிறார்கள். அதனைத் தடுக்க வேண்டும்" என்று கொந்தளித்துக் கூறினார்.





அருண் நெடுஞ்செழியன்

## நீர்நிலைகளை முதலாளிகளுக்கு ஒப்படைத்தல்

# கண்ணை விற்று சித்திரம் வாங்குவதா?



தொழிலாளர் நலனை பறிக்கிற,தொழிலாளர் உழைப்புச் சுரண்டலை சட்டப்பூர்வமாக்குகிற கருப்பு சட்டமானது நிறுத்தி வைக்கப்பட்டது. திருமண மண்டபங்களில் மது அருந்த அனுமதி வழங்குகிற மதுபானச் சட்டத் திருத்தம் பின்வாங்கப்பட்டது. ஆனால், அதே நாளில், தமிழக நீர்வளங்களை தனியார் நிறுவனங்களுக்கு தாரை வார்க்கிற நில ஒருங்கிணைப்பு சட்டம் ஒன்றை திமுக அரசு நிறைவேற்றியது அதிகம் கண்டுகொள்ளப்படவில்லை.

### தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு சிறப்புத் திட்டங்களுக்கான சட்ட மசோதா:

பெரும் திட்டங்களுக்கு நிலங்களை கையகப்படுத்துகிற முறைகளில் ஏற்படுகிற கால தாமதங்களை தவிர்க்கும் வகையில், நில ஒருங்கிணைப்பு சிறப்பு சட்ட மசோதாவை வருவாய்த்துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் சட்டமன்றத்தில் நிறைவேற்றினார். முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பது போல எவ்வாறு தொழிற்சாலை திருத்த சட்டம் மற்றும் மதுபானச் சட்டத்தை எந்தவித விவாதமும் இல்லாமல் சட்டமன்றத்தில் குரல் வாக்கெடுப்பு மூலமாக அரசு நிறைவேற்றியதோ அதேபோலத்தான் நில ஒருங்கிணைப்புச் சட்டமும் எந்தவிதம் விவாதமும் இல்லாமல் அவசர கதியில் நிறைவேற்றப்பட்டது.

இச்சட்டத்தை முன்மொழிந்து நிறைவேற்றிய வருவாய்த்துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன், தற்போது நடைமுறையின்படி அரசு நிலங்களை ஒருங்கிணைத்தல், பரிமாற்றம், உரிமை மாற்றம், ஒப்படைப்பு, குத்தகை முறைகள் போன்றவை இரு நூற்றாண்டு காலமாக பல்வேறு கட்ட நிர்வாக ஆணைகள் மற்றும் தீர்ப்புகள் மூலமாக உருவாக்கப் பெற்றவையாக உள்ளன. நிலமானது உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

பல்வேறு தீர்ப்புகள் நிர்வாக ஆணைகள், உள்ளாட்சி சட்ட நடைமுறைகளால் நிலத்தை கையகப்படுத்துவதற்கு பெரும் நேர விரையமும், பண விரையமும் ஏற்படுகிறது எனக் கூறுகிறார்.

இதை ஒழுங்குபடுத்துவதற்கும் பெரும் திட்டங்களுக்கு விரைவாக நிலத்தை கையகப்படுத்துவதற்கும் இந்த சட்டம் வகை செய்கிறது என்கிறார்.

அதாவது இந்த சட்டத்தின்படி 100 ஏக்கருக்குக் குறையாத இடத்தில் நீர்நிலையோ, ஓடையோ, வாய்க்காலோ இருந்து அந்த இடத்தில் உள்கட்டமைப்பு, வணிகம், தொழிற்துறை, வேளாண் சார்ந்த திட்டத்தை ஒருவர் செயல்படுத்த விரும்பினால் அத்திட்டத்திற்கு சிறப்புத் திட்ட அனுமதிகோரி அரசிடம் விண்ணப்பிக்கலாம்.

ஒருவேளை இந்த நூறு ஏக்கருக்குள் நீர்நிலைகள் இருந்தால் நிலத்தடி நீருக்கு எந்த பாதிப்பும் இல்லை என உத்தரவாதம் கொடுத்துவிட்டு நிலத்தை பயன்படுத்திக் கொள்ளாலாம் என்பதே சட்டத்தின் சாரம்.

### நில ஒருங்கிணைப்பு சிறப்பு சட்டத்தில் உள்ள ஓட்டைகள்:

முதலில் இந்த நில ஒருங்கிணைப்புச் சட்டமானது நடைமுறையில் உள்ள நீர்நிலைகள் பாதுகாப்பு சட்டத்தையும், நில கையகப்படுத்தும் சட்டத்தையும் செல்லாதவையாக்கிவிடும். உதாரணமாக, தற்போது நடைமுறையில் சுடுகாடு,நீர்நிலைகள்,மேய்ச்சல் நிலம் மற்றும் தடையாணைச் சட்டம்(தோப்பு உள்ளிட்டவை) போன்றவை நிலங்களின் எல்லைகளுக்குள் வந்தால்,அதற்கு வருவாய்த் துறையின் பல்வேறு அனுமதியை பெற வேண்டும்.ஒரு ஏக்கர் மேய்ச்சல் நிலம் கையப்படுத்தப்பட்டால் அதற்கு ஈடு செய்யும் வகையில் இரண்டு ஏக்கர் மேய்ச்சல் நிலம் வழங்க வேண்டும் போன்ற நடைமுறைகள் உள்ளன.

தற்போதைய சட்டமானது, மேற்கூறிய சட்டங்களை வெற்று காகிதமாக்கி விடும். உதாரணமாக, ஒரு தனியார் நிறுவனம் நூறு ஏக்கருக்கு ஒரு திட்டத்தை முன்மொழிவதாக வைத்துக் கொள்வோம். தற்போது அரசு அறிவித்துள்ள பரந்தூர் வானூர்தி நிலைய திட்டத்தையே எடுத்துக் கொள்வோம். திட்டம் வருகிற பகுதிகளில் விளை நிலங்களும்,பாசனத்திற்கோ குடிநீருக்கோ பயன்படும் நீர்நிலைகளும் இந்நிலத்திற்குள் வந்தால்.இந்த “சிறப்பு” சட்டத்தின்படி இத்திட்டத்திற்கு சிறப்புத் திட்ட அனுமதிகோரி மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பிக்கவேண்டும்.

அப்படி விண்ணப்பிக்கும்போதே திட்ட நிலத்தில் ஒட்டுமொத்த நீர் சேமிப்பு(water storage) குறைக்கப்படமாட்டாது, வாய்க்கால்கள், ஓடைகளின் கொள்திறன் அல்லது திட்ட நிலத்தின் நீரோட்டமானது குறைக்கப்படாது என்கிற உறுதி கூறினால் போதும்.

இவ்வாறு உறுதி கூறப்பட்ட விண்ணப்பத்தை மாவட்ட ஆட்சியர் அரசுக்கு அனுப்புவார்.அரசு நிபுணர் குழுவிற்கு அனுப்பும்.நிபுணர் குழு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கும்.அரசின் ஆதரவு நிபுணர் குழுக்குள் பெரும் தனியார் நிறுவனங்களின் திட்டங்களுக்கு ஏற்றவாறு ஒப்புதல் வழங்கும் என்பதை இங்கே விளக்கத் தேவையில்லை.

கொடுமை என்னவென்றால் நீர்நிலைகளை சுற்றி மரங்களை அகற்றி கான்க்ரீட் கட்டுமானங்களை எழுப்பிவிட்டால் நீர் நிலைகளை எவ்வாறு காப்பாற்ற முடியும்? என சிந்திக்காததே. நீர்நிலைகள் நிலத்தோடு பிணைந்த ஒரு சூழல் அமைவு.அந்த அமைவின் கண்ணிகளை அகற்றி விட்டால் இறுதியில் நீர்நிலைகள் தானகவே அழிந்துவிடும்.

முழுவதும் வணிக நோக்கில்,கார்பரேட் முதலாளிகளுக்கு கஷ்டமில்லாமல் நிலத்தையும் நீர்நிலைகளையும் வாரிக் கொடுப்பதற்கே இந்த சட்டத்தை திமுக அரசு கொண்டுவந்துள்ளது.

இது ஏதோ சுற்றுசூழல்வாதிகள் மட்டுமே எதிர்க்கவேண்டிய, பேச வேண்டிய விஷயமில்லை. காலநிலை மாற்ற நெருக்கடியால் இயற்கைப் பேரிடர்கள் அதிகரித்து வருகிற நிலையில் கண்ணை விற்று சித்திரம் வாங்குகிற கதையாக, இருக்கின்ற சூழல் வளங்களை அழித்துவிட்டு எந்த நீரை குடிக்க போகிறோம்? எந்த காற்றை சுவாசிக்க போகிறோம்? எந்த நிலத்தில் வசிக்கப் போகிறோம்?

### கடந்த கால படிப்பினைகளை புறந்தள்ளுகிற அரசு:

கடந்த காலத்தில் பல்வேறு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டங்கள் இருந்துமே தமிழகமெங்கும் பல்வேறு நீர்நிலை ஆக்கிரமிப்புகள் வளர்ச்சியின் பெயரால் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை மாநகரமே நீர்நிலைகளை கொலை செய்து உருவாக்கப்பட்டது என்பதுதான் உண்மை.

தற்போது சென்னையில் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்கள் மருத்துவமனைகள் ஏரிகள் மீதும் வாய்க்கால்கள் மீதுதான் கட்டப்பட்டுள்ளன.ஊழலும், லஞ்சமும் தலைவிரித்தாடும் நிலையில், காசு கொடுத்தால் அனுமதி கிடைத்துவிடும் என்பது பச்சிளம் குழந்தைகளும் அறியும்.

இயற்கையை நாம் அழித்தால் அது நம்மைப் பழிவாங்கும் என்கிறார் ஏங்கல்ஸ். சென்னையை சூழ்ந்த 2015 பெருவெள்ளமே மிகப்பெரும் சாட்சி. மாநகரின் நீர்நிலை ஆக்கிரமிப்புகளே மழை வெள்ளத்திற்கு போக்கிடம் இல்லாமல் சாலைகளையும் விமான நிலையங்களை, ரயில் நிலையங்களையும் குடியிருப்புகளையும் சூழ்ந்தன.

தற்போது கொண்டுவந்துள்ள நீர்நிலை கொலைச் சட்டத்தை பார்க்கும்போது,கடந்த காலத்திலிருந்து அரசு எந்த படிப்பினையும் பெற்றதாக தெரியவில்லை. ஆகவே நடைமுறையில் சட்டங்கள் இருக்கும் போதே இந்த நிலைமை என்றால் தற்போது இந்த சட்டம் வந்துவிட்டால் கேட்கவே வேண்டாம்.

ஆளுநர் எதிர்ப்பும் பாஜக எதிர்ப்பும் பாராட்டத் தக்கவை. ஆனால், நமது நீர்நிலை வளங்களை “முதலீட்டாளர்கள் நலன்” என்ற பெயரில் கார்பரேட்களுக்கு தாரை வார்ப்பது திராவிட மாடலின் கீழ் வருமா? என சம்மந்தப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டும்.

தொடர்புக்கு: 88254 25912

# நில ஒருங்கிணைப்பு சட்ட மசோதாவை கைவிடுக

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கை:

ஏப்ரல் 21 மாலை தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட, 15 மசோதாக்களில் ஒன்றாக அவசர அவசரமாக தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு சிறப்பு திட்டங்களுக்கான சட்ட மசோதா வருவாய்த்துறை அமைச்சரால் தாக்கல் செய்து நிறைவேற்றப்பட்டுள்ளது. அதில்,

100 ஏக்கருக்கும் குறையாத பரப்பளவு கொண்ட நிலங்களை, இதில் உள்ள வாய்க்கால், நீரோடைகள், நீர் நிலைகள் எது இருந்தாலும் எவ்வித தடையும் இல்லாமல் பெரும் நிறுவனங்கள் தன் தொழில் ஆதாரத்திற்காக தாராளமாக எடுத்துக் கொள்ளலாம் என்று இந்த சட்ட மசோதா வழிவகுக்கிறது.

இதுவரை உள்ள சட்டங்கள் என்பது நீர்நிலைகள் இருக்கும் பகுதிகளை கைவசப்படுத்திட பல கட்டுப்பாடுகள் உள்ளது. மேலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இவைகளை வரையறுத்திட அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. இப்படி நீர் நிலைகளை பாதுகாப்பதற்கு பல கட்டுப்பாடுகள் உள்ளதால் தொழில் வளர்ச்சிக்கான நிலமெடுப்பில் கால விரயமும்; பண விரயமும் ஏற்பட்டு வளர்ச்சி தடைபடுகிறது. எனவே கட்டுப்பாடுகளை எல்லாம் முற்றாக விலக்கி விட்டு, பெரு நிறுவனங்கள் தான் விரும்புகிற இடத்தில் விரும்பும் அளவில் விரும்பும் முறையில் நிலங்களை; நீர் நிலைகளை கைப்பற்றவே இந்த புதிய ஏற்பாடு.

காலப்போக்கில் நீர் வழி நிலைகள் தனியார் நிலங்களின் வழியே தடம்மாறி சென்றிருந்தாலும் அதையும் சேர்த்தே கையகப்படுத்த இந்த சட்டம் வழி வகுக்கிறது. தனியார் நில உரிமை இதில் பறிபோகிறது. கருத்து கேட்பது என்பது ஒருசடங்காக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் வரும் ஆட்சபனைகளை திட்ட அமலாக்கத்தின் போது கவனத்தில் கொள்ள வேண்டும் என்று மட்டும் தான் மசோதாவில் உள்ளது. திட்ட அனுமதிக்கு எவ்வித தடையும் இல்லை என்பதாகும்.

உலகின் வெப்பநிலை உயர்வால் நீர்வளம் அற்று, குடிநீர்கூட கிடைத்திடுமா என்ற அச்சத்தில் எதிர்காலம் உள்ள பொழுது, இப்படியான ஒருசட்டம் ஆபத்தை ஏற்படுத்தும். இந்த சட்ட மசோதாவின் மீது சட்டமன்ற உறுப்பினர்களை விவாதிக்க அனுமதிக்காமல் அவசர அவசரமாக குரல் வாக்கெடுப்பில் ஏன் நிறைவேற்றிட வேண்டும். வாழும் நிலையை பறித்து, வளத்தை கொடுப்போம் என்றால் யாருக்கு பயன் என்பதை தமிழ்நாடு அரசு மறுபரிசீலனை செய்திட வேண்டுமென தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.



வ.மணிமாறன்

# கர்நாடகாவில் குடும்ப வாரிசுகளை களமிறக்கும் பா.ஜ.க.






கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தல் பரப்புரை சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. மே பத்தாம் தேதி தேர்தல் நடைபெற இருப்பதால், தலைவர்கள் கர்நாடகா மாநிலத்தை முற்றுகையிட்டுள்ளனர்.

கர்நாடகாவில் காங்கிரஸ், பாஜக கட்சிகள் நேரடியாக மோதுகின்றன. காங்கிரஸ் இழந்த ஆட்சியை மீண்டும் பிடிப்பதற்கும்; பா.ஜ.க. இருக்கும் ஆட்சியை தக்கவைப்பதற்கும் போராடிக் கொண்டிருக்கின்றன.

பா.ஜ.க.வில் அமித்ஷா உள்ளிட்ட தலைவர்கள் தற்போது பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர். பிரதமர் நரேந்திர மோடி, உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் போன்ற நட்சத்திர பரப்புரையாளர்கள் களமிறங்க உள்ளனர். காங்கிரஸ் கட்சியில் ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி, மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோர் பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர்.

தென்மாநிலங்களில், பா.ஜ.க. ஆட்சியில் இருக்கும் ஒரே மாநிலமான கர்நாடகாவை தக்கவைக்க அதன் தலைவர்கள் பெரும்முயற்சியில் இறங்கியுள்ளனர். இதற்காக குஜராத் மாடலைப் போன்று புதுமுகங்கள், இளம்தலைவர்கள் கர்நாடகாவிலும் வேட்பாளர்களாக அறிவிக்கப் பட்டுள்ளனர். இதன் மூலம் ஆட்சியின் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தி, ஊழல் புகார்கள் போன்றவற்றிலிருந்து மக்களைத் திசைதிருப்ப முடியும் என பா.ஜ.க. நினைக்கிறது.

### அணிவகுக்கும் வாரிசுகள்...

மூச்சுக்கு 300 முறை குடும்ப அரசியல்.. குடும்ப அரசியல்ஞ் என்று பேசி வரும் பாரதிய ஜனதா, கர்நாடக தேர்தலில் குடும்ப வாரிசுகளை களமிறக்கி உள்ளது. பா.ஜ.க.வின் 222 வேட்பாளர்களில் 34 பேர் குடும்ப வாரிசுகள்.

முன்னாள் முதலமைச்சரும் கர்நாடக பா.ஜ.க.வின் முக்கிய தலைவருமான பி.எஸ்.எடியூரப்பாவின் மகன்கள் பி.ஒய். விஜயேந்திரா, பி.ஒய்.ராகவேந்திரா இருவரும் வேட்பாளர்கள். அமைச்சர் ஸ்ரீராமுலுவின் மருமகன் சுரேஷ் பாபு, அமைச்சர் அனந்த் சிங்கின் மகன் சித்தார்த் சிங், பா.ஜ.க. மூத்த தலைவர் ஜார்கி கோலியின் சகோதரர்கள் ரமேஷ் கோலி, பாலச்சந்திரா கோலி.

உமேஷ் கட்டியின் மகன்கள் நிகில் கட்டி, ரமேஷ் கட்டி. சுரங்கத் தொழில் அதிபர் ஜனார்த்தன ரெட்டியின் சகோதரர்கள் சோமசேகர் ரெட்டி, கருணாகர ரெட்டி ஆகியோர் வேட்பாளர்களாக உள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் உமேஷ் ஜாதவ்வின் மகன் அவினாஷ் ஜாதவ், நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எஸ். பசவராஜின் மகன் ஜோதி கணேஷ் உட்பட குடும்ப வாரிசுகள் 34 பேர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டனர். 10 அரசியல் குடும்பங்களில் இருந்து மட்டும் 25 பேர் வேட்பாளர்களாக உள்ளனர்.

“காங்கிரஸ், தி.மு.க. போன்ற கட்சிகளில் குடும்ப வாரிசுகளே அதிகாரம் செலுத்துகின்றனர். குடும்ப அரசியல் ஜனநாயகத்துக்கு எதிரானது; பா.ஜ.க.வில் குடும்ப அரசியலுக்கு இடமேயில்லை; பா.ஜ.க.வில் வாரிசுகள் அரசியலுக்கு வர முடியாது” என்றெல்லாம் பேசி வந்த தலைவர்கள், கர்நாடகாவில் குடும்ப வாரிசுகளின் வெற்றிக்காகப் பாடுபட்டு வருகின்றனர்.

### மூன்று விவகாரங்கள்

கர்நாடகாவில் இஸ்லாமியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 4 விழுக்காடு தனி இடஒதுக்கீட்டை அம்மாநில பாஜக அரசு ரத்து செய்துள்ளது. லிங்காயத் மற்றும் வொக்காளிகா சாதியினருக்கு இந்த 4 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்படும் என அறிவித்துள்ளது.

கர்நாடக மாநில கல்வி நிறுவனங்களில் ஹிஜாப் அணியக் கூடாது என கடந்த ஆண்டு விதிக்கப்பட்ட தடை பெரும் பிரச்சனையாக உருவெடுத்தது. “பள்ளிகளில் சீருடை மட்டும் அணிய வேண்டும்; வேறு எதை அணிந்தாலும் சமத்துவம், ஒற்றுமை, சட்டம் ஒழுங்கு பாதிக்கும்“ என அம்மாநில பா.ஜ.க. அரசு விளக்கம் அளித்தது. ஹிஜாப் அணிந்து வந்த மாணவிகள் கல்வி நிறுவனங்களில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இந்தப் பிரச்சனை நாடு முழுவதும் எதிரொலித்தது.

அடுத்து, கர்நாடகாவில் மாடு வெட்டத் தடை விதிக்கப்பட்டது. அம்மாநில இஸ்லாமியர்களின் உணவுப் பழக்கமாகவும், வேலை வாய்ப்பாகவும் இருந்து வரும் இதனைத் தடை விதிப்பது அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கக் கூடியது.

இந்த மூன்று விவகாரங்களும் இந்துக்களை ஒற்றுமைப்படுத்தி, இந்து வாக்கு வங்கியை உருவாக்குவதுடன், தேர்தலில் வெற்றியை ஈட்டித் தரும் என பா.ஜ.க. எதிர்பார்க்கிறது. இதற்காகத்தான் இந்த விவகாரங்களை பா.ஜ.க. கையில் எடுத்துள்ளது.

வீரசைவ லிங்காயத் மாநாட்டில் பேசிய பா.ஜ.க. முன்னாள் அமைச்சர் கே.எஸ். ஈஸ்வரப்பா, “சிவமோகா தொகுதியில் 60 ஆயிரம் இஸ்லாமியர்கள் இருக்கின்றனர். அவர்களின் வாக்குகள் எங்களுக்குத் தேவையில்லை. தனிப்பட்ட முறையில் இஸ்லாமியர்களுக்கு நிறைய உதவிகளைச் செய்திருக்கிறோம். அவர்கள் எங்களுக்கு வாக்களிப்பார்கள். தேசப்பற்றுள்ள இஸ்லாமியர்கள் எங்களுக்கு நிச்சயம் வாக்களிப்பார்கள்” என்று கூறினார்.

ஈஸ்வரப்பாவின் இந்தப் பேச்சும், மேற்கண்ட மூன்று விவகாரங்களும் பா.ஜ.க. திட்டமிட்டு செயல்படுத்தி வரும் பிளவுவாத, பாசிச உத்திகளைத்தான் வெளிப்படுத்துகிறது.

இப்படி சாதி, மத ரீதியாக மக்களைப் பிளவுபடுத்தி, அரசியல் ஆதாயம் தேடும் உத்திகள் ஆட்சியைப் பிடிப்பதற்கும், அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கும் பாஜகவுக்கு உதவி வருகிறது. இனிமேலும் உதவும் என எதிர்பார்க்கிறது.

இதற்கு மாற்றாகப் பேசி வரும் காங்கிரஸ் கட்சி, கர்நாடகாவில் 40 சதவீத கமிஷன்; ஊழல் மலிந்த ஆட்சி நடந்துகொண்டிருப்பதாக குற்றம் சாட்டுகிறது. அமைச்சர்களின் ஊழல்களைப் பட்டியலிட்டுப் பரப்புரை செய்து வருகிறது.

சமூக நலத் திட்டங்களுக்கான வாக்குறுதிகளை அறிவித்துள்ளது. முதலமைச்சருக்கு எதிராக இஸ்லாமிய வேட்பாளரை காங்கிரஸ் நிறுத்தியுள்ளது. சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றும், அதன் அடிப்படையில் இட ஒதுக்கீட்டைத் தீர்மானிக்க வேண்டும் என்றும் காங்கிரஸ் வலியுறுத்தி வருகிறது.

இதனால், கர்நாடக மாநிலத் தேர்தல் களம் கோடை வெயிலை விட கடும் அனல் வீசிக்கொண்டிருக்கிறது.

கர்நாடக மாநில சட்டப்பேரவைத் தேர்தல், இந்த ஆண்டு 9 மாநிலங்களில் நடைபெற இருக்கும் சட்டப்பேரவை தேர்தல்களுக்கும்; 2024 நாடாளுமன்ற தேர்தலுக்கும் முன்னோட்டமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை உணர்ந்துதான் பா.ஜ.க.வும் காங்கிரஸும் போட்டி போட்டு பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றன. பிளவுவாத, பாசிச அரசியலுக்கு முடிவுரை எழுதும் பயணம் கர்நாடகாவில் தொடங்கும் என்ற நம்பிக்கையை கருத்துக்கணிப்புகள் வெளிப்படுத்தி உள்ளன.

## சாதி ரீதியான துன்புறுத்தலால் தற்கொலை - சக மாணவர் கைது!

மும்பை அய்.அய்.டி.யில் தாழ்த்தப்பட்ட சமூக மாணவர் தர்ஷன் சோலங்கி மரண வழக்கில் 2 மாதத்திற்குப்பின், சக மாணவர் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

குஜராத் மாநிலம் அகமதா பாத்தைச் சேர்ந்தவர் தர்ஷன்சோலங்கி (18). மகாராட்டிர மாநிலம், மும்பையிலுள்ள இந்திய தொழில்நுட்பகழகத்தில் பி.டெக். முதலாமாண்டு படித்து வந்தார். இந்நிலையில் அவர், கடந்த பிப்ரவரி 12 அன்று கல்லூரி விடுதியின் 7ஆவது மாடியிலிருந்து குதித்து தற் கொலை செய்து கொண்டார்.

ஆனால், கல்விவளாகத்தில் ஜாதிய ரீதியாக காட்டப்பட்ட பாரபட்சம், அவமானம் ஆகியவையே மாணவர் சோலங்கியின் தற்கொலைக்கு காரணம் என்று மாணவர்கள் தரப்பிலிருந்து குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

கல்லூரி வளாகத்தில் ஜாதி ரீதியிலான பாகுபாடு நடைபெறவில்லை என மும்பை அய்.அய்.டி. சார்பில் அமைக்கப்பட்ட விசாரணைக்குழு தெரிவித்தது. மதிப்பெண் குறைவுகாரணமாக தர்சன் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என அக்குழு தெரிவித்தது.

உயிரிழப்பில் சந்தேகம் இருப் பதாக தர்ஷனின் பெற்றோர் தெரிவித்தனர். குறிப்பாக தர்ஷன் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதால் கல்லூரியில் சக மாணவர்கள் அவரிடம் பாகுபாடுகாட்டியதாகவும் இது குறித்து விசாரிக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர். இதுகுறித்து விசாரணை நடத்த மும்பை காவல்துறையினர், கடந்த பிப்ரவரி 28 அன்று சிறப்பு விசாரணைக் குழுவை அமைத்தனர். இக்குழு, தர்ஷன் குடும்பத்தினர், ஆசிரியர்கள், சக மாணவர்கள் உட்பட 35 பேரின் வாக்குமூலத்தை பதிவு செய்தது. இதனிடையே, கடந்த மார்ச் 3 அன்று தர்சன் தங்கியிருந்த அறையிலிருந்து கையால் எழுதப்பட்ட குறிப்பு ஒன்றையும் காவல் துறையினர் கைப்பற்றினர். அதில், “அர்மான் என்னை கொன்று விட்டார்” என குறிப்பிடப்பட்டிருந்தது. காவல்துறையினர் இதனைத் தடயவியல் சோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

தடயவியல் அதிகாரிகள் (கையெழுத்து நிபுணர்கள்) எஸ்.அய்.டி.அதிகாரிகளிடம் தங்கள் அறிக்கையை தாக்கல் செய்தனர். அதில், விடுதி அறையில் எடுக்கப்பட்ட குறிப்பில் இடம் பெற்றிருந்த கையெழுத்தும், உயிரிழந்த தர்சனின் கையெழுத்தும் ஒத்துப்போவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தர்சனுடன் ஒரே அறையில் தங்கி படித்து வந்த அர்மான் இக்பால் காத்ரியை கைது செய்துள்ளதாக மும்பை காவல் துறையின் சிறப்பு விசாரணைக்குழு தெரிவித்துள்ளது. அர்மான் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 306 (தற்கொலைக்குத் தூண்டுதல்) மற்றும் எஸ்.சி., எஸ்.டி. வன்கொடுமை தடுப்பு சட்டப்பிரி வின் கீழ் வழக்கும் பதிவு செய்யப்பட்டு உள்ளது. ஒரு குறிப்பிட்ட மதம் குறித்து அர்மான் கூறிய கருத்து தொடர்பாக அவருக்கும் தர்ஷனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், “எனது மகன் மும்பை அய்.அய்.டி.யில் ஜாதிரீதியிலான பாகுபாட்டை எதிர் கொண்டுள்ளான்.

எனவே, இதுகுறித்து உரிய விசாரணை நடத்தவேண்டும். எனது மகன் மீது ஜாதி ரீதியாக பாகுபாடு காட்டிய அனைவர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்“ என்று தர்சனின் தந்தை ரமேஷ் பாய் சோலங்கி வலியுறுத்தியுள்ளார்.



டி.எம்.மூர்த்தி

# 8 மணி வேலை நேர உரிமையை அகற்றும்

# நிறுத்தி வைத்தது நல்லது, முற்றாக

**தொழிற்சாலை சட்டத்தில் சில பிரிவுகளையும் நீக்கி திருத்தம் செய்வது தொடர்பான மசோதா தமிழ்நாட்டில் பெரும் எதிர்ப்பலைகளை ஏற்படுத்தியது.**




மோடி அரசு கொண்டுவந்துள்ள சட்டத் தொகுப்பை அமுலாக்க கால தாமதமாவதால், தமிழ்நாடு அரசு அதை நிறைவேற்றுவதாக மசோதா கொண்டு வந்தது மிகப் பெரும் அரசியல் பிழை ஆகும். தொழிலாளர்களுக்கு இது நன்மை செய்யும் என்று முதலாளிகளும் முதலாளி சங்கங்களும் கோரியபடி இந்த திருத்தத்தை செய்கிறோம் என்று அரசு சொன்னதால், அரசின் மீதான நம்பகத் தன்மையை மக்கள் இழந்தார்கள்.

ஏப்ரல் 12ஆம் தேதி இந்த மசோதாவை அறிமுகப்படுத்திய உடனே ஜனசக்தி அதனை எதிர்த்து தலையங்கம் தீட்டியது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸ்ட் கட்சி உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் எம்எல்ஏக்கள் முதல்வரை நேரில் சந்தித்து இதனால் ஏற்படும் பாதகங்களை விளக்கி நிறைவேற்ற வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இந்த சட்ட முன்வடிவு தொழிலாளர்களுக்கு பாதக விளைவுகளை ஏற்படுத்தும். தியாகி இளையபெருமாளுக்கு மணிமண்டபம், வி.பி.சிங்குக்கு சிலை ஆகியவற்றையெல்லாம் அறிவித்ததற்கு பின்பு தொழிலாளர் நலன்களுக்கு எதிரான சட்டத்தை கொண்டு வருவது நல்லதல்ல, உடனே கைவிட வேண்டும் என்று அதில் குறிப்பிட்டு இருந்தார்.

### குரல் வாக்கெடுப்பு

ஆனாலும் சட்டப்பேரவை கூட்டத் தொடரின் கடைசி நாளான 21.4.2023ம் நாள் அன்று, இந்தத் திருத்தச் சட்டம் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

இதனை எதிர்த்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தைகள், வாழ்வுரிமை கட்சி எம்.எல்.ஏ.க்கள் வெளிநடப்பு செய்தனர். காங்கிரஸ், ம.தி.மு.க., மனிதநேயக் கட்சி ஆகியவையும் எதிர்த்தன. பா.ஜ.க. மட்டுமே மசோதாவை ஆதரித்தது.

அதே நாளில் சட்ட திருத்தத்தை கைவிடக் கோரி தமிழ் நாடெங்கும் ஏஐடியூசி திரளான போராட்டங்களை நடத்தியது.

23.4.2023 அன்று தமிழ்நாட்டில் மிகப்பெரும்பாலான சங்கங்கள் ஒன்றாக கூடி இந்த திருத்தத்தை எதிர்கொள்ளும் வழிமுறை குறித்து விவாதித்தன. மே 12ஆம் தேதி வேலை நிறுத்தம் செய்வது எனவும் அதற்கு முன்னதாக வேலை நிறுத்த ஆயத்த இயக்கங்களை நடத்துவது என்றும் அவை தீர்மானித்தன.

### தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை

அடுத்த நாளில் மாலை 3 மணிக்கு மூன்று அமைச்சர்கள் தொழிற்சங்கங்களை சந்தித்து பேசப் போவதாக அரசு செய்திக் குறிப்பு வெளியிட்டது. தொழிற்சங்கங்களுக்கு நேரடியாக அழைப்பு இல்லை என்றாலும் தொழிலாளர் துறையில் இருந்து தொலைபேசி வாயிலாக அழைத்து கூட்டத்துக்கு வருமாறு கோரினார்கள்.

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, சிறு குறு நடுத்தர தொழில்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன், தொழிலாளர் துறை செயலாளர், தொழிலாளர் ஆணையர் உள்ளிட்டோர் தொழிற்சங்கங்களை சந்தித்தனர்.

இவர்களில் எ.வ.வேலு மட்டுமே பேசினார் அவருக்கு பிறகு தொழில்துறை செயலாளர் இதை ஏன் கொண்டு வந்தோம் என விளக்கினார்.

நான்கு நாள் வேலை செய்தால் மூன்று நாள் விடுப்பு, விடுதிகளில் தங்கி வேலை செய்யும் பெண்கள் வாரத்துக்கு மூன்று நாள் தங்கள் ஊருக்கு சென்று வரலாம். நான்கு நாள் ஒரு நிறுவனத்தில் வேலை பார்த்த பின்பு மற்ற மூன்று நாட்கள் வேறு நிறுவனங்களிலோ, சுயமாகவோ தொழில் புரிந்து தமது பொருளாதாரத்தை பெருக்கிக் கொள்ளலாம் என்றெல்லாம் அவர்கள் பேசினர்.

அவர்களது விளக்கம் ஒவ்வொன்றுக்கும் ஆணித்தரமான பதில்களை கூறி ஏ. சவுந்தரராஜன் சிஐடியு, டி.எம்.மூர்த்தி ஏஐடியுசி, மூத்த தலைவர் ஆர்.குசேலர், மு.சுப்பிரமணியம் எச்எம்எஸ், டி.வி.சேவியர் ஐஎன்டியுசி உள்ளிட்டோர் பேசினர்.

### எல்.பி.எப் விளக்கம்

தொழிலாளர் முன்னேற்ற சங்க

## வினாடி - வினா

1. இந்தியாவில் எட்டு மணி நேர வேலை முதன்முதலாக எங்கு? எந்த ஆண்டு நடைமுறைக்கு வந்தது?
2. தமிழ்நாட்டில் எட்டு மணி வேலை நேரத்தைப் பறிக்கும் திருத்தச் சட்டத்தின் பெயர் என்ன?
3. சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு (ILO) எந்த ஆண்டு 8 மணி நேர வேலையை அறிவித்தது?
4. கல்வி முறையில், உலக அளவில் முதலிடத்தில் இருக்கும் நாடு எது?
5. விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பி ஆய்வு மேற்கொள்ளும் இஸ்ரோ திட்டத்தின் பெயர் என்ன?
6. உலக அளவிலான பத்திரிக்கை சுதந்திரக் குறியீட்டில் இந்தியா தற்போது எத்தனையாவது இடத்தில் உள்ளது?

– விடைகளை 10 ஆம் பக்கத்தில் பார்க்கவும்



பொதுத்துறை நிறுவனங்களில் ஒன்றான விசாகப்பட்டினம் உருக்காலையை தனியார் மயமாக்காதே என்ற கோரிக்கையை முன்வைத்து, ஆந்திர மாநிலத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன.

விசாகப்பட்டினத்தில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பாஜக ஆட்சியை அகற்றுவோம்; தனியார் மயமாக்கலை தடுத்து நிறுத்துவோம் என முழங்கினர்.



எஸ்.காசிவிஸ்வநாதன்

# எட்டு மணி

**1886ல் எட்டு மணி நேர வேலை என்று அடிப்படை முழக்கத்தை எழுப்பி அமெரிக்காவின் சிக்காகோ நகரின் ஹே மார்க்கெட் (வைக்கோல் சந்தை) திடலில் தொழிலாளி வர்க்கம் ஆர்ப்பாட்டம் நடத்தியது.**

முதலாளித்துவ அமெரிக்கப் போலீஸ் அடக்கு முறையை ஏவிவிட்டது. தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். கூட்டத்தினிடையே முதலாளி கைக்கூலிகள் எறிந்த குண்டு ராணுவ அதிகாரி ஒருவனைக் கொன்றது. ஏழு போலீஸ்காரர்களும் நான்கு தொழிலாளர்களும் கொல்லப்பட்டனர்.

இதனைக் காரணமாக வைத்து ஆல்பர்ட் பார்சன்ஸ், அகஸ்ட் ஸ்பைஸ், ஜார்ஜ் எங்கல், அடால்ப் ஃபிஷர். ஆகிய நான்கு தலைவர்கள் 11.11.1887 அன்று தூக்கிலிடப்பட்டார்கள்.

தூக்கு மேடையில் இருந்து ஸ்பைஸ் பேசிய பேச்சு நம்பிக்கையின் பேரூற்றாகும். 'எங்கள் குரல் வளையை நெரிப்பதன் மூலம் எந்த அமைதியை உண்டாக்க முடியும் என்று நினைக்கின்றீர்களோ அதுவே பேரிரைச்சலாக மாறி உங்களை வெல்லும் காலம் வரும்'' என்றார் அவர்.

உலகமெங்கும் தமது நினைவாக மே தினம் நூற்றாண்டைக் கடந்து கொண்டாடப்படும் என்று அவர்களுக்கு தெரிந்திருக்காது. ஆனால் நிச்சயமாக தங்கள் கொள்கை வெல்லும் என்ற நம்பிக்கை அவர்கள் நெஞ்சில் எழுதி ஒட்டி இருந்தது.

1889 ஆம் ஆண்டு எங்கல்ஸ் தலைமையில் நடந்த இரண்டாவது கம்யூனிஸ்ட் அகிலத்தின் தொடக்க மாநாடு பாரிஸில் நடந்தது. அதுதான் சிக்காகோ போராட்டத்தை உலகத் தொழிலாளர்களின் உரிமைதினமாக, மேநாளாக கொண்டாடுவது என முடிவு எடுத்தது. எட்டு மணி நேரம் வேலை உலகத் தொழிலாளர்களின் உரத்த முழக்கமாக மாறியது.

விடுதலை இயக்கத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மாபெரும் தலைவர், தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் சிந்தனை சிற்பி சிங்காரவேலர் 1923 ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதி, சென்னை கடற்கரையில் செங்கொடியேற்றி பொதுக்கூட்டம் நடத்தி மே தின விழாவை இந்தியாவிலேயே முதல் தடவையாக கொண்டாடினார்.

இந்த மே தினம் அதன் நூற்றாண்டு ஆகும்.

பாம்பே மில் ஹேண்ட்ஸ் அசோசியேசன் துவங்கிய 1881ல் இருந்து வேலை நேரத்தை குறைக்க வேண்டும் என்பது தொழிலாளர்களின் கோரிக்கையாக இருந்தது. இந்தியாவில் மே தினம் கொண்டாடப்பட்டது வேலை நேரத்தை 8

## தமிழ்நாடு அரசின் மசோதா!
# ரத்து செய்ய வேண்டும்

பேரவையின் பொதுச் செயலாளர் மு.சண்முகம் இந்தச் சட்ட திருத்தம் தீங்கானது என நன்கு விளக்கினார். இதே போன்ற, ஒன்றிய அரசின் சட்டத்துக்கு நாடாளுமன்றத்தில் வாக்களித்து நிறைவேற்ற உதவிய அஇஅதிமுகவின் சங்கம் இங்கு எதிர்த்து பேசியது. அதேபோல பிஜேபியின் சங்கமான பிஎம்எஸ்ஸும் எதிர்த்தது.

எப்படியோ, அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் சேர்ந்து ஒரே குரலில் பேசின.

இந்தச் சட்ட திருத்தத்தின் மீது தொழிற்சங்கங்கள் விளக்கம் பெறுவதற்கு ஏதுமில்லை. அல்லது இதில் விவாதித்து திருத்தங்கள் செய்வதற்கும் ஏதுமில்லை. இந்த சட்டத் திருத்தம் முற்றிலும் ரத்து செய்யப்பட வேண்டியதாகும் என தெளிவாக எடுத்துரைத்தன.

தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையும் இதில் உறுதியாக இருந்ததை, மூத்த தொழிற்சங்க தலைவர் தோழர் ஆர்.குசேலர் கூட்டத்திலேயே பாராட்டினார்.

அமைச்சரும் தொழில்துறை செயலாளரும் முன்வைத்த விஷயங்களை, சங்கங்கள் உடைத்து நொறுக்கி, அவை பொருத்தமற்றவை எனப் புரிய வைத்தன. முதல்வர் முடிவு செய்வார் என அமைச்சர்கள் கூட்டத்தை முடித்தனர்.

### அரசியல் கட்சிகள் சந்திப்பு

அன்று மாலை 7 மணிக்கு அரசியல் கட்சித் தலைவர்களை சந்தித்த முதல்வர் சட்ட திருத்தத்தை நிறுத்தி வைப்பதாக அறிவித்தார். அரசு அறிவிக்கையில் பின்வரும் சொற்கள் கவனத்திற்குரியவை.

“இந்த அரசு ஒரு சட்டமுன்வடிவை எந்த அளவு உறுதியுடன் கொண்டுவருகின்றதோ. அது குறித்து மக்களிடம் ஏதேனும் மாற்றுக் கருத்துக்கள் வரப்பெற்றால் அவற்றைச் சீர்தூக்கி ஆராய்ந்து, அவர்களின் கருத்துக்களுக்கிணங்க அவற்றிற்கு மதிப்பளிக்கும் வகையில் நடந்துகொள்வதிலும் அதே அளவு உறுதி காணப்பட வேண்டும்.

அந்த வகையில், சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாவின் மீது பல்வேறு தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில், “2023ம் ஆண்டு தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண்.8/2023)” என்ற சட்டமுன்வடிவின் மீதான மேல்நடவடிக்கை நிறுத்தி வைக்கப்படுகிறது”

கழுத்தை அறுக்காமல் கத்தியை நிறுத்தியது நல்லதுதான். வரவேற்கத்தக்கதும் கூட. ஆனால் அது தலைக்கு மேலே தொங்கிக் கொண்டே இருப்பது நல்லதல்ல.

நிறுத்தி வைத்த சட்ட திருத்தத்தை, அரசு நடைமுறைக்கு ஏற்ற பொருத்தமான வகையில், கூடிய விரைவில் திரும்ப பெற்று ரத்து செய்வதுதான் தீர்வாக இருக்கும்.

வறட்டு கவுரவம் பார்க்காமல் நிறுத்தி வைக்க முன் வந்த தமிழக அரசு அதையும் செய்து முடிக்க வேண்டும்.

தொழிற்சாலை சட்டத்தின் கீழ் பணி புரியும் தொழிலாளி என்ற வரையறை தாண்டி, அனைத்து தொழிலாளர்களும், சரியாகச் சொன்னால் தமிழ்நாட்டு மக்களும் இந்த சட்ட திருத்தத்தை மனதார எதிர்த்தார்கள். அரசியல் கட்சிகள் அனைத்தும் தொழிலாளர்களுக்கு ஆதரவாக நின்றன. அரசின் மன மாற்றத்திற்கு அது முக்கிய காரணம். உடுக்கை இழந்தவன் கை போல இடுக்கண் களைய முன்வந்த அனைவருக்கும் நன்றி.

ஏப்.26ஆம் தேதி ஆலை வாயில் கூட்டம், ஆர்ப்பாட்டம். ஏப். 27இல் வேலைநிறுத்த முன்னறிவிப்பு வழங்குதல், ஏப்.28இல் கருப்புப் பட்டை அணிதல், ஆலைகளில் மதிய உணவு புறக்கணிப்பு செய்தல், மே 4, 5 ஆம் தேதிகளில் இரு சக்கர வாகன பிரசாரம், மே. 9 ஆம் தேதி மாவட்டத் தலைமையிடங்கள். தொழில் மையங்களில் ஆர்ப்பாட்டம், மே 12ல் வேலைநிறுத்தம், மறியல் ஆகிய போராட்டங்களை, இந்த திருத்தச் சட்டம் முற்றாக ரத்து செய்யும் வரையில் நிறுத்தி வைப்பது என தொழிற்சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

## பறிக்கப்படும் தொழிலாளர் உரிமைகள்

தமிழ்நாடு அரசு கொண்டு வந்த சட்ட திருத்தத்தின் மூலம் தொழிற்சாலை சட்டத்தின் 51, 52, 54, 55, 56 மற்றும் 59 பிரிவுகளை அனுமதி பெறும் தொழிற்சாலை நடைமுறைப்படுத்த வேண்டியது இல்லை.

அந்தப் பிரிவுகள் என்ன சொல்கின்றன என்று பார்ப்போம்

பிரிவு 51: எந்த ஒரு தொழிலாளியையும் ஒரு வாரத்திற்கு 48 மணி தேரத்திற்கு மேல் வேலை செய்ய அனுமதிக்க கூடாது.

பிரிவு 52: வாரத்திற்கு ஒரு நாள் கண்டிப்பாக விடுமுறை அளிக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பத்து நாட்கள் தொடர்ச்சியாக விடுமுறை இல்லாமல் இருக்கக் கூடாது.

பிரிவு 54: எந்த தொழிலாளியையும் நாளொன்றுக்கு 9 மணி நேரத்திற்கு மேல் வேலை வாங்க கூடாது.

பிரிவு 55: ஐந்து மணி நேரத்திற்கு பிறகு குறைந்த பட்சம் அரை மணி நேரம் ஓய்வுநேரம் ஒதுக்க வேண்டும்.

பிரிவு 56: எந்த ஒரு தொழிலாளியையும் ஒட்டுமொத்தமாக ஒரு நாளைக்கு தொழிற்சாலையில் பத்தரை மணி நேரத்திற்கு மேல் இருக்கும்படி (உஜீக்ஷீமீணீபீ ஷீஸ்மீக்ஷீ ஜீமீக்ஷீவீஷீபீ) செய்யக் கூடாது(ஓவர் டைம் உட்பட).

பிரிவு 59: எந்த ஒரு தொழிலாளியையும் ஒரு நாளைக்கு ஒன்பது மணி நேரத்திற்கு அதிகமாகவோ, அல்லது ஒரு வாரத்திற்கு 48 மணி நேரத்திற்கு அதிகமாகவோ வேலை வாங்க நேரிட்டால் அதற்கு ஈடாக இரட்டிப்பு சம்பளம் தர வேண்டும்.

தமிழக அரசின் திருத்தம் சட்டமாகிவிட்டால், மேற்சொன்ன விதிகள் தொழிலாளிக்கு பொருந்தாது. எந்த தடுப்பும் இல்லாமல் தொழிலாளியை முதலாளி ஒட்டச்சுரண்டுவதற்கு இந்த திருத்தங்கள் வழி திறக்கின்றன.


அந்த விதிகளை எல்லாம் நீக்கி விட்டு 4 நாள் வேலை பார்த்தால் 3 நாள் விடுப்பு. அதாவது 4, எட்டு நாட்கள் என்றால் 48 மணி நேரம் முடிந்தது. மீதி நாள் விடுப்பு என்கிறார்கள். எட்டு மணி நேரத்தையும் 48 மணி நேரத்தையும் எடுத்து வெளியில் போட்ட பிறகு எப்படி அந்த கணக்குகள் வரும்? அதைப்பற்றி அமைச்சர்கள் கவலைப்படவில்லை.

தொழிலாளர்களுக்கும் பெண் தொழிலாளர்களுக்கும் செய்துள்ள நன்மை என்ன? இங்கு 4 நாள் வேலை பார்த்தால் வேறு இடத்தில் மூன்று நாட்கள் வேலை பார்த்துக் கொள்ளலாமாம். அமைச்சர்கள் அப்படித்தான் சொன்னார்கள். ஒருவர் வாரம் முழுக்க 48 மணி நேரம் வேலை பார்த்தாலும் சம்பளம் போதாது, வாரத்துக்கு 84 மணி நேரங்கள் வேலை பார்த்து பிழைக்கட்டும் என்று சொல்வதற்கு அரசாங்கம் எதற்கு? மனிதர் நோக மனிதன் பார்க்கும் வழக்கத்தை இன்னும் வளரச் செய்வது தான் சமூக நீதி என்பதன் பொருளா?

வேலை வாய்ப்பு பெருகும் என்கிறார்கள். மூன்று ஷிப்ட்க்கு மூன்று பேர் பார்க்க வேண்டிய வேலையை இரண்டு பேர் பார்த்தால் ஒருவருக்கு வேலை போய்விடும். வேலைவாய்ப்பு உண்மையில் குறையும்.

உற்பத்தி அதிகரிக்கும் என்று கூறுவதிலும் உண்மை இல்லை. தொடர்ந்து 12 மணி நேரம் வேலை பார்த்தால் உற்பத்தித் திறன் குறையும். ஒரு மனிதர் நடப்பதாக வைத்துக் கொண்டாலும், அவர் முதலாவது மணி நேரத்தில் நடந்த வேகத்திலேயே 12வது மணி நேரத்தில் நடக்க இயலாது என்பதில் ரகசியம் ஏதுமில்லை.

# வேலை நேரம் ரத்தத்தால் எழுதப்பட்டது



சிக்காகோ போராட்டம்

மணி நேரமாக குறைக்க வேண்டும் என்ற முழக்கம் எழக் காரணமானது. புதுச்சேரி பஞ்சாலை தொழிலாளர்களிடையே பெரும் செல்வாக்கு படைத்தவராக தோழர் வ.சுப்பையா இருந்தார். அவர் பேச்சு தொழிலாளர்களைத் தட்டி எழுப்பியது.

எட்டு மணி நேர வேலை கோரி 1936 ஜூலை 23ஆம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் தொடங்கியது. ஜூலை 30 ஆம் நாள் காலை பிரெஞ்சு ஆயுதப்படை எந்திரச் சூழல் துப்பாக்கியால் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களை நோக்கி சுட்டது. குண்டுகள் சரமாரியாக பொழிந்தன. ஆவேசமுற்ற தொழிலாளர்கள் எதிர் தாக்குதல் நடத்தினர்.

துப்பாக்கிச் சூட்டில் 12 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். எட்டு மணி நேர வேலைக்காக உயிரிழந்து தியாகிகளானார்கள்.

தொழிலாளர்கள் இடையே கொதிப்பும் கொந்தளிப்பும் ஏற்பட்டது வீராவேசத்தோடு தொழிலாளர்கள் ஆயுதப்படையை நோக்கி விரைந்தனர். ஆங்காங்கே தங்களின் கைகளுக்கு கிடைத்த கல், தடி, இரும்புத்தடி, இரும்பு, பல்சக்கரம் போன்ற ஆயுதங்களை எடுத்து எதிர் தாக்குதல் நடத்தினர்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த போராட்டத்திற்கு தலைமையேற்ற வ.சுப்பையா. ஜவகர்லால் நேருவை அழைத்தார். 1936 அக்டோபர் 19ஆம் நாள் நேருவும் பிரம்மாண்டமாக திரண்டு இருந்து தொழிலாளர்களிடையே உரையாற்றினார். தொடர்ந்து நடந்த முயற்சிகளின் விளைவாக 1937 மார்ச் 6 சுப்பையா பிரான்ஸ் சென்றார்.

ஏப்ரல் 6ல் பிரெஞ்சு இந்தியாவிற்கான தொழிற்சங்க சட்டம் இயற்றப்பட்டது. எட்டு மணி நேர வேலையும் தொழிற்சங்கம் அமைக்கும் உரிமையும் வழங்கப்பட்டது. ஆசிய நாடுகளிலேயே 8 மணி நேர வேலை என்பது புதுச்சேரியில் தான் முதன் முதலில் அமலாக்கப்பட்டது.

இந்திய விடுதலைக்கு பிறகுதான் இந்தியாவில் எட்டு மணி நேர வேலை என்பது சட்டப்பூர்வ உரிமை ஆயிற்று. முதலாளித்துவத்தின் கோரப்பற்களை பிடுங்கும் கோடிக்கால் பூதத்திற்கு யார் தடை போட்டாலும் அடித்து நொறுக்கப்படுவார்கள்.

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் இழந்து போவதற்கு எதுவும் இல்லை! அடைவதற்கு நிச்சயம் பொன்னுலகம் உண்டு.

தொடர்புக்கு: 94434 68710

## 3 ம் பக்கத் தொடர்ச்சி

விலைவாசி உயர்வு, வேலை இல்லாத் திண்டாட்டம், வறுமை, பசி, பஞ்சம், தனியார்மயம் என மக்கள் அன்றாடம் படுகின்ற துன்பங்கள் பெருகி உள்ளன. இதை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காத மோடி அரசும் சங்பரிவார் கும்பலும் மனிதர்களுக்கிடையே மோதலை உருவாக்கி கலவரங்களை தூண்டி விட்டு ஆட்சியை தக்க வைக்க துடிக்கின்றார்கள்.

நூறு பொதுத்துறை நிறுவனங்கள் தனியார் மயமாக்கப் பட்டிருக்கின்றன. 13 லட்சம் கோடி ரூபாய் இந்திய தேசத்தின் சொத்து பெரும் முதலாளிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதானியினுடைய கொள்ளையைக் ஹிண்டன்பர்க் அறிக்கை வெளிப்படுத்தியது.

மோடியும் ஒன்றிய அரசாங்கமும் தொழிற்சங்கங்கள் இருப்பதை, செயல்படுவதை விரும்பவில்லை. தொழிற்சங்களையே முடக்கி போட முயல்கின்றனர். சட்டங்கள் பிரிட்டிஷ் காலனி ஆட்சிக்கு உட்பட்ட காலத்திலேயே போராடிப் பெற்ற சட்ட உரிமைகள் முடக்கப்படுகின்றன. 70%க்கு மேலான தொழிலாளர்களுக்கு எந்த சட்ட உரிமையும் இல்லை. தொழிற்சங்க தலைவர்கள் பழிவாங்கப்படுகிறார்கள். 44 தொழிலாளர் சட்டங்கள் 4 தொகுப்புகளாக சுருக்கப்பட்டு இருக்கின்றன.

கர்நாடகாவில் 12 மணி நேர வேலை அமலாகிறது. தமிழ்நாட்டிலும் . தொழிற்சாலைகள் சட்டம் திருத்தப்பட்டு இருக்கிறது. இதனை எதிர்த்து வலுவான போராட்டங்களை நடத்துவதற்கு தயாராகிறோம். சட்டமன்றத்திலும் எதிர்ப்பை பதிவு செய்துள்ளோம்.

1919ல் உருவான உலகத் தொழிலாளர் அமைப்பான ஐ.எல்.ஓ. வுடைய முதல் கன்வென்ஷனிலேயே உலகம் முழுவதும் அதன் உறுப்பு நாடுகளுக்கு 8 மணி நேர வேலை நேரம் என்பதை உறுதிப்படுத்தி உள்ளது. இந்திய விடுதலைக்காக மக்கள் சர்வபரி தியாகம் செய்து போராடிக் கொண்டிருந்தபோது, ஆர் எஸ் எஸ் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுக்கவில்லை.

1920 இல் உருவான ஏ.ஐ.டி.யூ.சி. செங்கொடியை உயர்த்தி இந்திய விடுதலைக்கு போராடியது. அன்று ஆர்.எஸ்.எஸ். பிரிட்டிஷ் முதலாளிகளுக்கு சேவகம் செய்தது. ஆர்.எஸ். எஸ். முன்னோடிகள் கோல்வால்கரும், ஹெட்கேவாரும் ஹிட்லர், முசோலினி வழியில் சர்வாதிகாரத்திற்கு வித்திட வழிகாட்டினார்கள். அவர்களுக்கு செங்கொடி என்றால் அச்சம். நரேந்திர மோடி கம்யூனிச சித்தாந்தம் ஆபத்தானது என்கிறார். லாலா லஜபதி ராய், ஜவஹர்லால் நேரு நேதாஜி, வி.வி.கிரி சரோஜினி நாயுடு, சித்தரஞ்சன் போன்றவர்கள் வழிநடத்திய ஏஐடியூசி சோசலிசமே தீர்வு என்பதை ஏற்று இந்திய விடுதலைக்கு இரத்தம் சிந்தியது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாக்கவும், தேசத்தின் வளர்ச்சிக்காகவும் நம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளோம். விடுதலைக்குப் பின்பு நாட்டின் முன்னேற்றத்திற்காக ஏஐடியூசி தொடர்ந்து போராடுகின்றது. விடுதலைக்குப் பின்பு பொதுத்துறை வளர்வதற்காக பாடுபட்டோம். தேசத்தை பாதுகாக்க, இந்திய பொதுத்துறையை பாதுகாக்க,இந்திய நாட்டின் அரசு துறையையும், செல்வ வளங்களையும் பாதுகாக்க, போராடி பெற்ற சட்ட உரிமைகளை பாதுகாக்க, தேசம் காக்கும் மகத்தான போரில் நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம்.

ஜனவரி 30 அனைத்து தொழிற்சங்கங்கள் எடுத்த முடிகளை வீதி வீதியாக கொண்டு சென்று தொழிலாளர்களையும் உழைக்கும் மக்களையும் அணி திரட்டுவோம் !

போராட்டங்கள் தோற்றதில்லை! ஒன்றுபட்ட போராட்டங்கள் தொடர்ந்து நிகழும். 2024 ஆம் ஆண்டு தேர்தலில் கார்ப்பரேட் ஆதரவு,மத வெறியை தூண்டிவிடும் ஆர். எஸ். எஸ் தலைமை தாங்கும் பிஜேபி அரசை தூக்கி எறிய ஒன்றுபடுவோம்“என்று ஏஐடியூசி பொதுச் செயலாளர் அமர்ஜித் கவுர் பேசினார். அவரது பேச்சை வழக்கறிஞர் கே சுப்பிரமணியம் மொழிபெயர்த்தார்

தமிழ்நாடு ஏஐடியூசி தலைவர் எஸ். காசி விஸ்வநாதன், மாவட்ட பொதுச் செயலாளர் சி.தங்கவேலு, மாவட்ட நிர்வாகிகள் சி. சிவசாமி ஆர். பாலகிருஷ்ணன் டி. கந்தவேல் எஸ். மோகன் எம். சண்முகம் எல். செல்வம், கே.எம். செல்வராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக அமர்ஜித் கவுர் அவர்களிடம் தொழிற்சங்க அமைப்புகள் சார்பில் பாராளுமன்ற தேர்தல் கட்சி வளர்ச்சி நிதியாக ரூ 1,52,500 வழங்கப்பட்டது.

## வினாடி - வினா விடைகள்

1. 1936 ஆம் ஆண்டு புதுச்சேரியில் நடைமுறைக்கு வந்தது
2. 2023 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம்
3. 1919 ஆம் ஆண்டு
4. பின்லாந்து
5. ககன்யான் திட்டம்
6. 150 வது இடம்

# குற்றச் செயல்கள் அச்சுறுத்துகின்றன: இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

குற்றச் செயல்கள் அச்சுறுத்துகின்றன. அவற்றை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது. இது குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பத்து கிராம நிர்வாக அலுவலர் லூர்து பிரான்சிஸ் (55) பணியில் இருந்த போது, பட்டப்பகலில் அவரது அலுவலகத்தில் அத்துமீறி நுழைந்து, அவரை விரட்டி, விரட்டி வெட்டிப் படுகொலை செய்திருக்கும் சம்பவம் பெரும் பதற்றத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மணல் திருட்டுக் கும்பல் அதிகாரத்தை கையில் எடுத்துக் கொண்டு, அவர்களது சட்டவிரோத, சமூக விரோதச் செயல்களுக்கு உடன்படாத, ஒத்துப்போகாத அரசுப் பணியாளர்களை தாக்குவது, படுகொலை செய்வது அரசு கட்டமைப்பை நிலைகுலைக்கும் கடுமையான குற்றச்செயலாகும்.

படுகொலைக்கு ஆளான கிராம நிர்வாக அலுவலர் லூர்து பிரான்சிஸ் குடும்பத்துக்கு தமிழ்நாடு அரசு ஒரு கோடி ரூபாய் நிதியுதவியும், அரசு வேலையும் வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இது உயிர் பலி கொடுத்துள்ள, அந்தக் குடும்பத்தை அரவணைத்து ஆறுதல்படுத்தும் நல்ல அணுகுமுறை தான். ஆனால் அரசின் சட்ட விதிகளை பின்பற்றி, பாரபட்சம் இல்லாமல் செயல்பட்டு வரும் அரசு பணியாளர்களின் மனஉறுதியை கடுமையாக பாதிக்கும் என்பதை அரசு கருத்தில் கொள்ள வேண்டும். மணல், மண் போன்ற இயற்கை வளக் கொள்ளைச் சம்பவங்கள் மட்டுமல்ல வேறு பல பிரிவுகளிலும் மிரட்டிப் பணம் பறிக்கும் குற்றச்செயல்களும் வெளிப்பட்டு வருகின்றன என்பதை அரசு கவனிக்க வேண்டும்.

காவல் துறை குற்ற நடவடிக்கைகளை தடுக்கும் முயற்சி மேலும் தீவிரமாக வேண்டும். எந்த நிர்பந்தங்களுக்கும், அழுத்தங்களுக்கும் பணிந்து விடாமல் தடுக்கும் உறுதியான நடவடிக்கை எடுத்து, குற்றச் செயல்களை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

## கலை இலக்கியம்

### உலக புத்தக தின விழா




**ராஜபாளையம்:** உலக புத்தகம் மற்றும் பதிப்புரிமை நாளை முன்னிட்டு என்.ஏ.மஞ்சம்மாள் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் ராஜபாளையம் கிளை இணைந்து நடத்திய உலக புத்தக தின விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

கல்லூரி தாளாளர் ஸ்ரீ என்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி ராஜா தலைமை தாங்கினார். முனைவர் பிச்சையா பிள்ளை வரவேற்புரை நல்கினார். மாநிலத் துணைத் தலைவர் கவிஞர் கண்மணி ராசா உரையாற்றினார்.

**சாத்தூர்:** சாத்தூர், தனுஷ்கோடி அரங்கத்தில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சாத்தூர் கிளை, எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி அறக்கட்டளை மற்றும் அறிவொளி புத்தக கடை இணைந்து உலக புத்தகத் தின விழா, நூல் அறிமுகம், பாரதிதாசன், பட்டுக்கோட்டையார் அவர்களின் பிறந்த நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

**தாம்பரம்:** தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் தாம்பரம் கிளை சார்பாக மேற்கு தாம்பரம் ஔவை பள்ளியில் உலக புத்தக தின விழா நடைபெற்றது. ஜீவாமணி குமார் தலைமை தாங்கினார். முனைவர் முருகன், முனைவர் மா ராமமூர்த்தி, உதவி பேராசிரியர் பத்ம உஷா சிறப்புரையாற்றினார்.

மாவட்ட செயலாளர் கவிஞர் ராமலிங்கம், மாநில செயற்குழு உறுப்பினர் டி.எஸ்.நடராஜன், சாந்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

**புதுச்சேரி:** புதுச்சேரி மாநில கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் உலகப் புத்தகத் தின விழா நிகழ்ச்சி காமராசர் கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது.

முனைவர் அரங்க. முருகையன் சிறப்புரையாற்றினார். பொதுச்செயலாளர் பெ.பாலகங்காதரன் நோக்கவுரை ஆற்ற, தலைவர் எல்லை. சிவக்குமார் வாழ்த்துரை வழங்கினார்.

**சத்திரப்பட்டி:** சத்திரப்பட்டியில், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் ராஜபாளையம் கிளை சார்பாக உலக புத்தக தின விழா நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு கல்லூரி முதல்வர் டாக்டர் அருண் தலைமை தாங்கினார். ராஜபாளையம் கிளைத் தலைவர் கவிஞர் ஆனந்தி முன்னிலை வகித்தார். தமிழ் துறைத் தலைவர் பேராசிரியர் சக்திவேல் வரவேற்புரை நல்கினார்.

கவிஞர் கண்மணி ராசா, பொதுச் செயலாளர் டாக்டர். த.அறம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

### பாரதிதாசன் நினைவு நாள்

**புதுச்சேரி:** புரட்சி கவிஞர் பாரதிதாசன் நினைவு நாளில் அவரது இல்லத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு புதுச்சேரி மாநில கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

**சென்னை:** தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், சென்னை மாவட்டம் ஆழ்வார்பேட்டை கிளை சார்பாக புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் நினைவு நாள் நிகழ்ச்சி மயிலாப்பூர் நாகேஸ்வர ராவ் பூங்காவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வீ.சேது லட்சுமி பாரதிதாசன் பாடல்கள் பாடி தொடங்கி வைத்தார். பேராசிரியர் முனைவர் ம.இளங்கோவன் தலைமை தாங்கினார். கணபதி இளங்கோ நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பு செய்தார். பேராசிரியர் மணி கோ.பன்னீர்செல்வம் பாரதிதாசனின் அரசியல் ஆத்திசூடி என்ற தலைப்பில் ஆய்வுரை வழங்கினார்.

### நாடகம் குறித்த கருத்தரங்கம்

தூத்துக்குடி மாநகர கலை இலக்கியப் பெருமன்றமும், ஆகம் கலையகமும் இணைந்து நடத்தும் நாடகம் குறித்த கருத்தரங்கமும் மற்றும் ஆகம் நாடகவெளி திறப்புவிழாவும் நடந்தது.

ஆகம் நாடகவெளியை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். பேராசிரியர் முனைவர் மு.இராமசாமி, எழுத்தாளர் சொ.பிரபாகரன், எழுத்தாளர் முஹம்மது யூசுப், அருட்சகோதரி முனைவர் எழிலரசி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

### இரா.விச்சலன் நினைவேந்தல்

திண்டுக்கல் மாவட்ட தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மூத்த முன்னோடி இரா.விச்சலன் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல், சிபிஐ மாவட்டக்குழு அலுவலகத்தில் நடைபெற்றது.

### நூல் வெளியீட்டு விழா

**இராமேஸ்வரத்தில்** ஞானசீலன் அவர்களின் வாழ்க்கை வரலாறு நூல் வெளியீட்டு விழா மற்றும் டாக்டர் பாபாசாகிப் அம்பேத்கரின் பிறந்தநாள் விழா மாவட்ட செயலாளர் என். எஸ்.பெருமாள் தலைமையில் நடைபெற்றது. தாலுகா செயலாளர் ரவிச்சந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஆர் முத்தரசன் நூல் வெளியிட இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் கே நவாஸ் கனி நூலினை பெற்றுக் கொண்டார்

இந்த நிகழ்வில் தேசியக் கவுன்சில் உறுப்பினர் தி.இராமசாமி, காங்கிரஸ் இளைஞர் அணி தேசிய பொறுப்பாளர் ஆம்ஸ்ட்ராங், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ரவிச்சந்திர ராமவன்னி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்டச் செயலாளர் பேட்ரிக் தமிழ்நாடு வாழ்வுரிமை கட்சியின் மாநில இளைஞர் அணிச் செயலாளர் ஏ.ஜெரோன்குமார் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் என். கே.ராஜன், எஸ்பி ராதா, எஸ்.முருகானந்தம், எஸ் முருகபூபதி உட்பட பலர் பேசினர். இந்த நிகழ்வில் கட்சி வளர்ச்சி நிதியாக இராமேஸ்வரம் தாலுகாக் கமிட்டியின் சார்பில் ரூ.45000 வழங்கப்பட்டது. ஆரோக்கியநாதன் நன்றி கூறினார்.

**கோவை:** கவிஞர் கோ.கலியமூர்த்தியின் “நாம் இன்னும் சந்திக்கவே இல்லை”, கவிஞர் நாணற்காடனின் “எளிய நதி நான்” கவிதை நூல்கள் மற்றும் கவிஞர் நான்சி கோமகனின் “வளையாபதி” சிறுவர்களுக்கான நூல் அறிமுக நிகழ்வு கோவை தியாகிகள் நிலையத்தில் நடைபெற்றது.

நாடகவியலாளர் த.திலிப்குமார் தலைமையில், முனைவர் கார்த்திகேயன், கவிஞர் க.விஜி, ஆய்வு மாணவர் கல்பனா, மூவரின் அறிமுகவுரைகள் நுட்பமாகவும் உணர்வுபூர்வமாகவும் அமைந்து பங்கேற்றோரை வெகுவாக கவர்ந்தன.

# ஓசூர் பகுதியில் விளை நிலங்களில் சிப்காட் அமைப்பதை கைவிட வேண்டும்

சட்டசபையில் டி.ராமச்சந்திரன் பேச்சு



காவல்துறை தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை மானிய கோரிக்கைகளின் மீது தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் பேசியதாவது:

மானிய கோரிக்கையின் மீது எனது கருத்துக்களை எடுத்துரைப்பதற்கு முன்பாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாயிகள் 105 நாட்களுக்கு மேலாக காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதனை முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

ஓசூரை அடுத்த உத்தனப்பள்ளி, நாகமங்கலம் அயர்னப்பள்ளி ஆகிய மூன்று ஊராட்சிகளில் ஐந்தாவது சிப்காட் அமைக்க அரசு 3660 ஏக்கர் விவசாய விளை நிலங்களை கையகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து 105 நாட்களுக்கு மேலாக காத்திருப்பு போராட்டத்தில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். அதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

## விவசாயிகள் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும்

சமீபத்தில்ஒன்றிய அரசு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமான காவேரி டெல்டா மாவட்டங்களில் மூன்று இடங்களில் நிலக்கரி வெட்டி எடுக்க அனுமதி வழங்கிய போது, இதே அவையில் தீர்மானம் நிறைவேற்றி காவேரி டெல்டா மாவட்டம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாத்தது போல் ஓசூர் பகுதியில் விளை நிலங்களில் சிப்காட் அமைப்பதை கைவிட்டு விவசாயிகள் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும்.

தமிழகம் அமைதி பூங்காவாக திகழ்வதால் தெற்கு ஆசியாவிலேயே தொழில் தொடங்க உகந்த மாநிலமாகவும், தொழில் முதலீடுகளை ஈர்க்கின்ற மாநிலமாகவும் தமிழகம் திகழ்கிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## காவல் நிலையங்களில் சி.சி.டி.வி. காமிரா

விசாரணை கைதிகளை காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து விசாரிக்கும் போது உச்சநீதிமன்றத்துடைய வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்ற அனைத்து காவல் நிலையங்களுக்கும் அறிவுறுத்த வேண்டும் குற்றவாளிகளை கையாளும்போது காவல் துறையினருக்கு (Sensitisation Training) உணர்திறன் பயிற்சி வழங்க வேண்டும்.

குற்றதடயங்களை கண்டறிய சி.சி.டி.வி. கேமராக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன அனைத்து காவல் நிலையங்களிலும் சி.சி.டி.வி. கேமராக்கள் பொருத்தப்பட வேண்டும் அதேபோல காவல்துறையின் சார்பில் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி பகுதியில் உள்ள சி.சி.டி.வி. கேமராக்களை பழுது பார்க்க ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், தற்போது தமிழகத்தில் 12 போக்ஸோ நீதிமன்றங்கள் மட்டும்தான் உள்ளன. அந்த வழக்குகளை விரைவாக விசாரித்து தண்டனை பெற்றுதரும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் போக்ஸோ நீதிமன்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

## ஆணவப்படுகொலையை தடுக்க தனிச்சட்டம்

ஜாதி மறுப்பு திருமணம் செய்து கொள்பவர்கள் தனது தந்தையாலோ அல்லது உறவினர்களாலோ படுகொலை செய்யப்படுகின்றனர். இதற்கு காரணம் பகுத்தறிவு கருத்துகளுக்கு எதிராக ஜாதி மத வெறுப்பு அரசியல் பரப்புரைதான். ஆகவே நடப்பு சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே ஆணவ படுகொலைகளை தடுக்க தனி சட்டம் இயற்ற வேண்டும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊத்தங்கரை அடுத்த அருணபதி கிராமத்தை சேர்ந்த தண்டாயுதபாணி என்பவர் ஜாதி மறுப்பு திருமணம் செய்து கொண்ட தன் மகன் சுபாஷ் மருமகள் அனுசியா தடுக்க வந்த தனது தாய் கண்ணம்மாள் ஆகியோரை கத்தியால் வெட்டியதில் சுபாஷ் மற்றும் கண்ணம்மாள் அதே இடத்தில் உயிரிழந்தனர். மருமகள் அனுசியா உயிருக்கு போராடும் நிலையில் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் கடந்த 20 நாட்களில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடந்த இரண்டாவது ஆணவ படுகொலை ஆகும். இவைகள் தடுக்கப்பட வேண்டும்.

## ஒரு நம்பர் லாட்டரிக்கு தடை

ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டம் கொண்டு வந்திருப்பதை பாராட்டுகிறேன்.

தமிழகத்தில் லாட்டரி முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது. எல்லையோர மாவட்டங்களில் சிங்கிள் நம்பர் லாட்டரி புழக்கத்தில் உள்ளது. இதை முழுமையாக தடை செய்ய வேண்டும்.

## ஆருத்ரா பின்னணியில்...

ஆருத்ர நிதி நிறுவனத்தில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட சாமானிய மக்கள் சிறுக சிறுக சேமித்து வைத்த பணத்தை முதலீடு செய்து ஏமந்துள்ளார்கள். இதன் பின்னணியில் அரசியல் பின்புலம் வாய்ந்த பிரமுகர்கள் இருப்பதாக தெரிய வருகிறது. யாராக இருந்தாலும் சட்டப்படி கைது நடவடிக்கை மேற்கொண்டு அந்த நிறுவனத்தின் சொத்துக்களையும் நிறுவன பங்குதாரர்களின் பினாமி மற்றும் உறவினர்களின் பெயரில் உள்ள சொத்துகளை பறிமுதல் செய்ய வேண்டும்.

## நியாயமின்றி சிறைபட்டோரை விடுவித்திடுக

தமிழ்நாட்டின் சிறைச்சாலைகளில் கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக வாழ்நாள் சிறை தண்டனை அனுபவித்து வரும் 37 முஸ்லிம் சிறைவாசிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய இந்த அரசு கருணையுடன் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

கல்பாக்கம் அணு உலைக்கு எதிராக போராட்டம் நடத்திய நமது சட்டமன்ற உறுப்பினர் அப்துல் சமது மற்றும் மதிமுக துணை பொது செயலாளர் மல்லை சத்யா மீது போடப்பட்டுள்ள வழக்குகளும் அதேபோல ஒன்றிய அரசு கொண்டு வந்த மூன்று வேளாண் திருத்த சட்டங்களுக்கு எதிராக தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பாகவும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகவும் டிராக்டர் பேரணி நடத்திய நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் மீது பல்வேறு மாவட்டங்களில் போடப்பட்ட வழக்குகள் திரும்ப பெறாமல் உள்ளன அவற்றை திரும்ப பெற வேண்டும்.

## பாஸ்போர்ட்டை முடக்காதீர்

ஜனநாயக நாட்டில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்துவது குடிமக்களின் ஜனநாயக கடமை. ஆனால் போராட்டம் நடத்துபவர்களின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தால், அவர்கள் பாஸ்போர்ட்டிற்கு விண்ணப்பம் செய்யும்போது இதனை காரணம் வைத்து அவர்களுக்கு பாஸ்போர்ட் வழங்க மறுக்கப்படுகிறது. இதனால் தமிழக இளைஞர்கள் வெளிநாடுகளில் வேலைக்கு செல்ல முடியாத நிலை அதேபோல, மாணவர்கள் வெளிநாட்டிற்கு சென்று படிக்க முடியாத நிலை உள்ளது இந்த நடைமுறை மாற்றப்பட வேண்டும்.

கோவில் திருவிழாக்களில் நையாண்டி, கரகாட்டம் ஆர்கெஸ்ட்ரா மெல்லிசை பாடல்கள் நடத்த காவல்துறையால் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது மக்களுடைய உணர்வுபூர்வமான பிரச்சனை. ஆகவே, நிபந்தனைகளுக்கு உட்பட்டு கலை நிகழ்ச்சிகள் நடத்த காவல்துறை அனுமதி வழங்க வேண்டும்.

## காவலர்களும் மனிதர்களே

காவலர்களின் வேலை பளு மற்றும் மன அழுத்தத்தை குறைக்கும் வகையில் 8 மணி நேரம் பணி வரம்பு, வாரம் ஒரு நாள் விடுமுறை என்பதையும் உத்திரவாதம் படுத்த வேண்டும். மேலும், கேரள மாநிலத்தில் உள்ளது போல காவலர்கள் சங்கம் அமைத்துக் கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.

காவல்துறையில் ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை இரண்டாம் நிலை காவலர்களில் இருந்து காவல் துணை கண்காணிப்பாளர் வரை பதிவு உயர்வு வழங்க வேண்டும்.

அதேபோல காவல்துறையில் உள்ள ஊதிய முரண்பாடுகளை களைய வேண்டும்.

தற்போது காவலர்களுக்கு கொடுக்கப்படும் இடர்பாடு படி காவலர்களிலிருந்து துணை காவல் கண்காணிப்பாளர் வரை ரூ.1000 லிருந்து ரூ.5000 உயர்த்தி வழங்க வேண்டும்.

எரிபொருள் மானியம் மாதம் ரூ.870 லிருந்து ரூ.2000 ஆக உயர்த்தி வாங்க வேண்டும்.

கடந்த 2011 திமுக ஆட்சி காலத்தில் தேர்வு செய்யப்பட்ட 1000 உதவி ஆய்வாளர்களுக்கு ஆய்வாளர்களாக பதவி உயர்வு வழங்க வேண்டும்.

கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை ஆய்வாளராக பணியாற்றி வரும் 80 பேருக்கு துணை காவல் கண்காணிப்பாளராக பதிவி உயர்வு வழங்க வேண்டும்.

மேலும் ஏ.டி.எஸ்.பி. ஆக பணியாற்றி வருகின்ற 15 பேருக்கு காவல் கண்காணிப்பாளர் பதவி உயர்வு வழங்க வேண்டும். இவ்வாறு பேசினார்.




## தளி தொகுதி கோரிக்கைகள்

தளி தொகுதியில் மதகொண்டபள்ளியை மையமாகக் கொண்டு குற்றம் நடவடிக்கையை தடுக்கும் வகையில் புதிய காவல் நிலையம் அமைத்து தரவேண்டும்.

புதிதாக பிரிக்கப்பட்ட அஞ்செட்டி வட்டத்தில் அஞ்செட்டியை மையமாகக் கொண்டு தீயணைப்பு நிலையம் அமைத்து தர வேண்டும்.

மஞ்சுகொண்டபள்ளி ஊராட்சி பேல்பட்டி முதல் பிளிக்கள் வரை 10 கிலோ மீட்டர் தூரம் தார் சாலை அமைத்து தர வேண்டும்.

அஞ்செட்டி அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்டார மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும்.

தளி தொகுதி கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம் மேலூர் முதல் தொளுவபெட்டா வரை சுமார் 7 கிலோமீட்டர் மலை கிராமத்திற்கு தார் சாலை அமைத்து தர வேண்டும்.

தளி தொகுதி கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம் பெட்டமுகிலாளம் ஊராட்சி மேலூர் முதல் குல்லட்டி வரை சுமார் 6 கிலோமீட்டர் மலை கிராமத்திற்கு தார் சாலை அமைத்து தர வேண்டும்.

தளி தொகுதி கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம் அனுமந்தபுரம் ஊராட்சி கூச்சுவாடி முதல் குடியூர் வரை சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு சார் சாலை அமைத்து தர வேண்டும்.

தேன்கனிக்கோட்டையில் இருந்து கொடக்கரை மலை கிராமத்திற்கு மாணவர்கள் மற்றும் விவசாயிகளின் நலன் கருதி சிற்றுந்து இயக்க வேண்டும்.

தளி ஊராட்சி ஒன்றியம் ஆச்சுபாளம் ஊராட்சி மேலாளர் முதல் குருசாத்தப்பன்தொட்டி வரை சுமார் 5 கிலோ மீட்டர் தார் சாலை அமைத்து தர வேண்டும்.

தென்பெண்ணை ஆற்றின் உபரி நீரை தொரப்பள்ளியில் இருந்து லிப்டிரிகேசன் மூலமாக கார்காண்டப்பள்ளி ஏரி, பைரமங்கலம் ஏரி, கெலமங்கலம் ஏரி, லட்சுமிபுரம், நாகமங்கலம் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட ஏரிகளை நீர் நிரப்புவதின் மூலம் சுமார் 2000 ஏக்கர் பாசன வசதி பெறுகின்றன. ஆகவே நீர்வளத் துறை மூலமாக இந்த திட்டத்தினை நிறைவேற்றி தர வேண்டும்.

தளி தொகுதியில் வனவிலங்குகள் மற்றும் யானைகள் குடியிருப்பு மற்றும் விவசாய விளை நிலங்களுக்குள் புகாதவாறு வனப்பகுதியை ஒட்டி சுமார் 100 கிலோமீட்டர் தூரம் சோலார் மின்வேலி அமைக்க வேண்டும்.

காஞ்சிபுரத்தில்

## 80க்கும் மேற்பட்டோர் சிபிஐயில் இணைந்தனர்



காஞ்சிபுரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பேரவை கூட்டம் மாவட்ட செயலாளர் பா.கார்த்திக் தலைமையில் நடைபெற்றது.

இன்றைய அரசியல் நிலைமையும், மத்திய மாநில அரசியல் நிலைமைகளை விளக்கி மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி பேசினார்.

மாற்றுக் கட்சியிலிருந்து ஆறுமுகம், லாரன்ஸ் ஆகியோர் தலைமையில் 80 மேற்பட்ட தோழர்கள் தங்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இணைந்து கொண்டனர்.

கூட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளர் ஏ.மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் பி.வி.சீனிவாசன் மற்றும் 200க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். எஸ்.வி.சங்கர் நன்றி கூறினார்.

## கலாஷேத்ரா குற்றவாளிகளை கைது செய்யக்கோரி ஆர்ப்பாட்டம்

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில் இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.மாவட்ட செயலாளர் பாண்டிச்செல்வி தலைமை வகித்தார். சிபிஐ தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, வட்ட செயலாளர் கோவிந்தன், பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ ஆகியோர் கலாஷேத்ராவில் நடைபெற்ற பாலியல் குற்றங்களில் ஈடுபட்ட அனைவரையும் கைது செய்ய வேண்டுமென்று பேசினார்கள்.

## தருமபுரி வி.தொ.ச. ஆர்ப்பாட்டம்

தருமபுரி மாவட்ட விவசாய தொழிலாளர்களின் அடிப்படை வாழ்வாதார கோரிக்கைகளான வீட்டு மனை இடம், வீடு, உணவு, குடிநீர், வேலை, கல்வி, மருத்துவ வசதி, சம உரிமை, ஓய்வூதியம் போன்ற கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டி தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் முன் சங்க மாவட்ட தலைவர் ஜி.மாதையன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கோரிக்கைகளை விளக்கி சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் பேசினார். சங்க மாவட்ட துணைச் செயலாளர் ஜி. பச்சாகவுண்டர், மாவட்ட துணைத்தலைவர்கள் ஜி. ராஜகோபால், என்.முருகேசன் மற்றும் திரளான விவசாய தொழிலாளர் கலந்து கொண்டனர்,

## பால் உற்பத்தியாளர் சங்கத்தை பாதுகாத்திடுக!



மணப்பாறை பேருந்து நிலையம் அருகில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக, விவசாயிகளிடமிருந்து தனியார் நிறுவனங்கள் அதிக அளவில் கூடுதல் விலையில் பால் வாங்குவதால் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு பால் வரவு குறைக்கிறது. அதனால் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் தற்போது நலிவடைந்து வருகின்றன கூட்டுறவு சங்கங்களை காப்பாற்ற தமிழக அரசு மானியம் வழங்கியும், பால் உற்பத்தியாளரிடம் பெறப்படும் பாலுக்கு லிட்டருக்கு 10 மானியம் வழங்கிட வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர் தங்கராசு தலைமை வகித்தார்.

தமிழ்நாடு விவசாய சங்க மாநில துணை செயலாளர் த.இந்திரஜித், மாவட்ட செயலாளர் சிவசூரியன், மாவட்ட பொருளாளர் பழனிச்சாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர செயலாளர் ஜனசக்தி உசேன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

## சாலையை சீரமைக்க ரூ.58 லட்சம் நிதி ஒதுக்கிய எம்.செல்வராசு எம்.பி.



திருத்துறைப்பூண்டியில் வேதை சாலையில் முள்ளியாற்றங்கரையில் அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட வீரர், விவசாயிகள் சங்கத் தலைவர் தியாகி பி.சீனிவாசராவ் அவர்களின் நினைவு மேடைக்கு செல்லும் பாதை நீண்ட நாட்களாக பழுதடைந்து உள்ளது. சாலையை உயர்த்தி இருபுறமும் சுற்றுச்சுவர் எழுப்பி சிறப்பாக செய்திடவும், திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு தனது நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.58 லட்சம் ஒதுக்கீடு செய்து பரிந்துரை செய்துள்ளதாக திருத்துறைப்பூண்டி – திருச்சி வழித்தடத்தில் புதிய ரயில் சேவையை கொடி அசைத்து துவக்கிட வருகை தந்த நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராசு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. பழனிச்சாமி, கே.உலகநாதன், சட்டமன்ற உறுப்பினர் கே.மாரிமுத்து, ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர், நகர்மன்றத் தலைவர் கவிதா பாண்டியன், திமுக நகரச் செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன், சிபிஐ மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பி.வி.சந்திரராமன், நரக செயலாளர் டி.பி.சுந்தர் ஆகியோர் உடனிருந்தனர்.

## இந்திய மாதர் தேசிய சம்மேளனம் ஒன்றிய மாநாடுகள்



**அவிநாசி:** இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் அவிநாசி ஒன்றிய மாநாடு தனிஸ்லாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் திருப்பூர் புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் மோகன், மாதர் சம்மேளனத்தின் மாவட்ட கன்வீனர் நதியா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மாநாட்டில் அவிநாசி ஒன்றிய தலைவராக சாவித்திரி, செயலாளராக பேபி, பொருளாளராக கோவிந்தமணி தேர்வு செய்யப்பட்டனர்.

**பர்கூர்:** இந்திய மாதர் தேசிய சம்மேளன கூட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூரில் அம்மு தலைமையில் நடைபெற்றது.

மாநில துணைத்தலைவர் சுந்தரவல்லி கலந்து கொண்டு இன்றைய ஒன்றிய, மாநில அரசியல் நிலை குறித்தும், மாதர்கள் பிரச்சனை குறித்தும் விளக்கிப் பேசினார். மாவட்ட தலைவர் சுபித்ரா கலந்து கொண்டார்.

தலைவராக அம்மு, செயலாளராக ஆனந்தி, பொருளாளராக கல்பனா, துணைத் தலைவராக விஜி, துணைச் செயலாளராக காளியம்மாள் மற்றும் ராஜேஸ்வரி, மஞ்சுளா, சுமதி ,சித்ரா உள்ளிட்டோர் பொறுப்பாளர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

**செம்பனார்கோவில்:** இந்திய மாதர் தேசிய சம்மேளன செம்பனார்கோவில் ஒன்றிய பேரவை பாலா தலைமையில் நடைபெற்றது. பேரவைக்கு கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.சீனிவாசன், ஒன்றிய செயலாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி, என்.எப்.ஐ.டபிள்யூ மாநில குழு உறுப்பினர் பி.தேவகி, பேரூராட்சி உறுப்பினர் எஸ்.வித்யா தேவி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

மாதர் சங்கத்தின் ஒன்றிய பொறுப்பாளர்களாக மல்லிகா தலைவர், கஸ்தூரி துணைத் தலைவர், ஸ்ரீ பாலா செயலாளர், அன்புச்செல்வி துணை செயலாளர், அலெக்ஸ் தேவி பொருளாளர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## ஜூன் 17ல் சென்னையில் தர்ணா போராட்டம்

### ● ஆஷா பணியாளர்கள் சங்க மாநிலக் குழுக் கூட்டம் தீர்மானம்

ஏஐடியுசியுடன் இணைக்கப்பட்ட தமிழ்நாடு ஆஷா பணியாளர்கள் சங்கத்தின் மாநிலக் குழு கூட்டம் ஏப்.16 அன்று ஈரோட்டில் ஆண்டாள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், ஏஐடியுசி தேசியத் துணைத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி சிறப்புரையாற்றினார். பொதுச் செயலாளரும், ஏஐடியுசி தேசிய செயலாளருமான வகிதா நிஜாம் அரசியல் மற்றும் வேலையறிக்கை சமர்பித்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.டி.பிரபாகரன், ஏஐடியுசி மாநிலச் செயலாளர் எஸ்.சின்னசாமி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் துணைத் தலைவர் சி.எம்.துளசிமணி, ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் எம்.குணசேகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஆஷா பணியாளர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும்; ஆஷா பணியாளர்களுக்கு மாதம் ரூ. 24,000 தொகுப்பூதியம் வழங்கிட வேண்டும்; கொரோனா கால சிறப்பு நிதி ரூ15,000 ஆஷா பணியாளர்களுக்கும் வழங்கிட வேண்டும்; 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று 45 வயதிற்குள் இருக்கும் ஆஷா பணியாளர்களை கிராம சுகாதார செவிலியர் ( வி.எச்.என்.) ஆக பணி நியமனம் செய்வதாக சுகாதார துறை அமைச்சர் அளித்த உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும் இக்கோரிக்கை வலியுறுத்தி வரும் ஜூன் 17 அன்று ஏஐடியுசி தேசியத் துணைத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி. தலைமையில் தர்ணா போராட்டத்தை சென்னையில் நடத்துவது என்றும்; இக்கோரிக்கைகளை விளக்கி வரும் மே 15 முதல் 30 ஆம் தேதி வரை மண்டல மாநாடுகளை நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

## தலித்கள் மீதான தாக்குதலை கண்டித்து ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் வடசென்னை, மத்திய சென்னை, தென் சென்னை மாவட்டங்கள் இணைந்து நடத்திய மண்டலக் கூட்டம் சென்னை பாலன் இல்லத்தில் இரா.மோ.சந்தோஷ்குமார் தலைமையில் நடைபெற்றது.

வடசென்னை மாவட்டச் செயலாளர் ஜி.சுப்பிரமணி எதிர்கால கடமைகள் குறித்து பேசினார். தேசிய குழு உறுப்பினர் வி.உதயகுமார் தேசியக்குழு, மாநிலக்குழு முடிவுகளை விளக்கிப் பேசினார். மாநில தலைமைக்குழு உறுப்பினர் செண்பகம் உறுப்பினர் பதிவு குறித்து பேசினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு உறுப்பினர் வஹிதா நிஜாம், ஒன்றிய அரசின் ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான தாக்குதல்கள் குறித்துப் பேசினார்.

ஒன்றிய மோடி அரசு தொடர்ந்து ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான தாக்குதல்களை தடுத்து நிறுத்த வலியுறுத்தி தேசியக்குழு முடிவின்படி மே 14 ஆம் தேதி சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பட்டம் நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

ஏஐடியுசி முயற்சியால் பந்தல் கட்டுமானத் தொழிலாளிக்கு

# விபத்து மரண இழப்பீடு ரூ.5 லட்சம்

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தில் பணியிட விபத்தில் இறந்த பந்தல் கட்டுமானத் தொழிலாளி ஜோ.தன்ராஜ் குடும்பத்தினருக்கு ரூ.5,00,000 இழப்பீட்டு நிதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் இறந்த தொழிலாளியின் மனைவி லட்சுமி தன்ராஜ் அவர்களிடம் வழங்கப்பட்டது.



தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் மாநிலச் செயலாளரும், நலவாரிய மாவட்ட கண்காணிப்புக்குழு உறுப்பினருமான எஸ்.சின்னசாமி, ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் எஸ்.கந்தசாமி, மாவட்ட துணைச் செயலாளர் எம்.முத்துகுமார், ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் எம்.பாபு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## தோழர் ஆர்.நல்லையன் 47 ஆம் ஆண்டு நினைவுதினம்

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றியம், நெடும்பலம் கிராமத்தில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் முன்னாள் ஒன்றிய செயலாளர் தோழர் ஆர்.நல்லையன் அவர்களின் 47 ஆம் ஆண்டு நினைவுதினம் நடைபெற்றது. பண்ணை ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட கிராமங்களில் ஒன்றான நெடும்பலம் கிராமத்தில் பண்ணைகளுக்கு எதிராக நடைபெற்ற பல்வேறு இயக்கங்களில் பங்கேற்று இளைஞர்களை ஒருங்கிணைத்து பலமான இளைஞர் பெருமன்ற அமைப்பை உருவாக்கிய ஆர்.நல்லையனின் 47 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் க.மாரிமுத்து எம்.எல்.ஏ., மாநிலக் குழு உறுப்பினர் கே. உலகநாதன் எக்ஸ்.எம். எல்.ஏ., அ.பாஸ்கர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர், வழக்கறிஞர் எம்.வையாபுரி உள்ளிட்டோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## தாலுகா அலுவலகத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்

மதுரை மாவட்டம் மேலூரில் சிபிஐ தாலுகா செயலாளரும் வழக்கறிஞருமான சுரேஷ் குமார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநில கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் காளிதாஸ் முன்னிலை வகித்தார்.

மேலூர் தாலுகா அலுவலகத்தில் சான்றிதழ் மற்றும் பட்டா, சிட்டா, முதியோர் உதவித்தொகை, ரேஷன் கார்டு பெயர் சேர்த்தல், நீக்கல் ஆகியவற்றிற்காக பொதுமக்களை அலைக்கழிப்பதை கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் மாவட்ட துணைச் செயலாளர் மெய்யர், தாலுகாக் குழு உறுப்பினர் பெரியவர், மாவட்டக் குழு உறுப்பினர் திலகர் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## உயர்நீதிமன்ற தீர்ப்பை அமல்படுத்த கோரி ஆர்ப்பாட்டம்

ஆலங்குளம் கண்மாய் மற்றும் கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்ற உயர்நீதி மன்றம் உத்தரவிட்டும் அதை செயல் படுத்தாத மதுரை மாநகராட்சியையும், பொதுப்பணித் துறையையும் கண்டித்து மதுரையில் இந்தியக் கம்யூ.,கட்சியின் வடக்கு பகுதி குழு ஆலங்குளம், ஆணையூர் கிளைகளின் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் பி.வீரணசிங்கம் தலைமையில் நடைபெற்றது. எஸ்.திருப்பதி முன்னிலை வகித்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், முன்னாள் மாவட்ட செயலாளர் எம்.சரவணன், மாதர் சங்க மாவட்ட செயலாளர் பா.ராஜலட்சுமி, ஏஐடியூசி மாவட்ட செயலாளர் கே.சேது ஆகியோர் உரையாற்றினர்.

## ஆளுநர் ரவிக்கு கருப்புக் கொடி எதிர்ப்பு

**தஞ்சை:** தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்திற்கு பட்டமளிப்பு விழா நிகழ்ச்சிக்கு வருகை தந்த தமிழ்நாடு ஆளுநர் ரவியைக் கண்டித்து கம்யூனிஸ்ட் கட்சிகள் சார்பில் கருப்புக்கொடி போராட்டம் நடைபெற்றது.

**ராமநாதபுரம்:** சிபிஐ, சிபிஎம், மதிமுக, விசிக ஆகிய கட்சிகள் இணைந்து ராமநாதபுரத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் கருப்புக்கொடி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் சிபிஐ மாவட்டச் செயலாளர் என்.எஸ். பெருமாள் தலைமையில் நடைபெற்றது. சிபிஐ சார்பில் என்.கே.ராஜன், ஆர். தர்மராஜன், சிபிஎம் சார்பில், எம்.சிவாஜி, மதிமுக சார்பில் பேட்ரிக், விசிக சார்பில் விடுதலை சேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

## கட்சி உறுப்பினர் அட்டை வழங்கு விழா

தென்காசி மாவட்டம் சிவகிரியில் 2023 ஆண்டுக்கான கட்சி உறுப்பினர் அட்டை வழங்கும் விழா நகர துணைச் செயலாளர் கா.குருவு தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்டோ தொழிற்சங்க செயலாளர் முனியாண்டி முன்னிலை வகித்தார்.

சி பி ஐ நகர செயலாளர் பி.பாலசுப்பிரமணியன், கூட்டுறவு பண்டகசாலை சங்க தலைவர் வி. ராஜேந்திரன், மாவட்ட குழு உறுப்பினர் க.கண்ணன், வி.தொ.ச. செயலாளர் சி. அருணாசலம், இளைஞர் பெருமன்ற நகர செயலாளர் க.பு.பால்சாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## த.ஒ.வா.இ. தூத்துக்குடி மாவட்ட அமைப்புக் கூட்டம்

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் தூத்துக்குடி மாவட்ட அமைப்புக்கூட்டம் மாவட்ட கட்சி அலுவலகத்தில் பாபு தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் மு.வீரபாண்டியன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் பி.கருப்பன், அமைப்பின் தென்மண்டல அமைப்பாளர் பி.சுகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட தலைவராக பாபு, செயலாளராக வழக்கறிஞர் முத்துலட்சுமி, பொருளாளராக எஸ்.பி.குணசேகரன், துணைத் தலைவராக ரஞ்சனி கண்ணம்மா, துணைச் செயலாளராக சோலையப்பன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## மாதர் தேசிய சம்மேளன அம்பத்தூர் பகுதி மாநாடு

இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் அம்பத்தூர் பகுதி குழுவின் முதல் மாநாடு மேனாம்பேடு தாய்த் தமிழ் பள்ளியில் மங்கையர்கரசி தலைமையில் நடைபெற்றது.

அம்பத்தூர் பகுதி குழு செயலாளர் இரா விஜயகுமார், மாரியப்பன், நாச்சியப்பன், மத்திய சென்னை மாவட்ட செயலாளர் (மாதர் சங்கம்) இ.தனலட்சுமி ஆகியோர் பங்கேற்றனர்.

மாதர் சங்கத்தின் மத்திய சென்னை மாவட்ட தலைவர் மாணிக்கவல்லி அறிக்கை சமர்ப்பித்தார்.

தலைவராக மங்கையர்க்கரசி, செயலாளராக அமுதா, பொருளாளராக புவனேஸ்வரி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்ட துணைச் செயலாளர் செல்வி நந்தகுமார் நன்றி கூறினார்.

ஓய்வு பெற்ற ஓட்டுனர்களுக்கு

## மாதம் ரூ.9000 ஓய்வூதியம் வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்

புதிதாக உருவாக்கப்பட்ட மோட்டார் வாகன சட்டத்தை ரத்து செய்ய வேண்டும், ஓய்வு பெற்ற ஓட்டுனர்களுக்கு மாதம் ஓய்வூதியமாக ரூ. 9000 வழங்க வேண்டும், ஆன்லைன் அபராதத்தை கைவிட வேண்டும், அனைத்து வாகன ஓட்டுனர்களையும் நலவாரியத்தில் சேர்க்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தென்காசி மாவட்டம் சிவகிரியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஏஐடியூசி மாவட்டகுழு உறுப்பினர் க.கண்ணன் தலைமையில் நடைபெற்றது.

சி.பி.ஐ. மாவட்ட செயலாளர் தி.இசக்கித்துரை, ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் டி.சுப்பையா உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர்.

தனியாருக்கு துப்புரவு பணி:

## திருச்சி மாநகராட்சி கவுன்சிலர்கள் வெளிநடப்பு




திருச்சி மாநகராட்சியில் உள்ள 65 வார்டுகளிலும் துப்புரவு பணியை தனியாருக்கு வழங்கும் தீர்மானத்தை எதிர்த்து, க. சுரேஷ் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி) உள்ளிட்ட காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், மனிதநேய மக்கள் கட்சி மாநகர் மன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

கரிசல் நாவலின்

## ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா

சாகித்திய அகாதமி விருதாளர் எழுத்தாளர் பொன்னீலன் எழுதிய கரிசல் நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பு 'Black Soil' வெளியீட்டு விழா சென்னைப் பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு விழா அரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் ஆங்கிலத் துறைத் தலைவர் முனைவர் ஆம்ஸ்ட்ராங் வரவேற்புரை நிகழ்த்தினார். நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்க பாண்டியன் நூலை வெளியிட, எழுத்தாளர் திலகவதி ஐ.பி.எஸ் பெற்றுக் கொண்டார்.

கணையாழி ஆசிரியர் ம.ராசேந்திரன், தாமரை இதழாசிரியர் சி.மகேந்திரன், நாவலாசிரியர் பொன்னீலன் மற்றும் மொழிபெயர்ப்பாளர் டாக்டர் பிரியதர்ஷினி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்ச்சியில் தோழர்கள் ஜீவாமணிக்குமார், தலைமைக் குழு உறுப்பினர், டி.எஸ்.நடராசன், கணபதி இளங்கோ உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

## லெனின் பிறந்தநாள் விழா

**வண்டலூர்**; மாமேதை லெனின் 153வது பிறந்தநாள் விழா லெனின் அன்றும் இன்றும் என்றும் என்ற தலைப்பில் கருத்தரங்கம் தலைநகர் தமிழ்ச்சங்கம் அலுவலகம் வண்டலூரில் மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் சொ.இரணியப்பன் தலைமையில் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் ஏ.ராஜ் குமார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் லெனின், இந்திய கம்யூனிஸ்டு மாவட்ட துணை செயலாளர் வி.வீராசாமி மற்றும் இடதுசாரி கட்சிகள் தோழர்கள் பங்கேற்றனர்.

**தஞ்சை:** தஞ்சை பழைய பேருந்து நிலையம் முன்பாக நடைபெற்ற பிறந்தநாள் நிகழ்ச்சிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வெ.சேவையா தலைமை வகித்தார். இடதுசாரிகள் பொதுமேடை ஒருங்கிணைப்பாளர் துரை.மதிவாணன், முன்னிலை வகித்தார். நிகழ்வில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட துணைச் செயலாளர் கோ.சக்திவேல், மாநகர செயலாளர் ஆர். பிரபாகர் மற்றும் இடதுசாரி கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

என்.டி.சி. மில் தொழிலாளர்களுக்கு

## வேலையில்லா கால நிவாரணம் கோரி ஆட்சியரிடம் மனு

என்.டி.சி. மில் தொழிலாளர்களுக்கு வேலையில்லா கால நிவாரணம் வழங்க கேட்டு கோவை மாவட்ட ஆட்சி தலைவர் கிரந்திகுமார் பாட்டி அவர்களிடம் தொழிற்சங்க தலைவர்கள் மனு அளித்தனர். கடந்த 2020 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் தேதி முதல் கொரோனாவை காரணம் காட்டி இந்த ஆலைகள் மூடப்பட்டது. மூன்றாண்டுகள் ஆகிய நிலையிலும் பஞ்சாலைகள் திறக்கப்படவில்லை. இதில் பணியாற்றி வந்த தொழிலாளர்கள் அவர்களது குடும்பங்கள் வேலை இழந்து வருமானம் இன்றி தவித்து வருகிறார்கள்.

ஒன்றிய அரசுக்கு பலமுறை விண்ணப்பம் செய்தும் ஒன்றிய அரசும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே மூன்று ஆண்டு காலமாக வேலை இழந்து தவித்து வரும் தொழிலாளர் குடும்பங்களுக்கு, அடிப்படை வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில், தமிழ்நாடு அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் மாவட்ட ஆட்சியரிடம் வலியுறுத்தினர்.

ஏ.ஐ..டி.யூ.சி. பொது செயலாளர் எம். ஆறுமுகம், செயலாளர் சி.சிவசாமி உட்பட அனைத்து தொழிற்சங்கத் தலைலவர் கலந்து கொண்டனர்.

### கஞ்சி காயச்சும் போராட்டம்

கோவையில் உள்ள மில்களுக்கு முன்பு தொழிலாளர்கள் கஞ்சி காய்ச்சும் போராட்டம் நடத்தினர். இதில் அனைத்து தொழிற்சங்க தலைவர்கள் பங்கேற்றனர்.

# நூல் நயம்

## 1908 முன்னும் பின்னும்




இந்திய நாட்டின் விடுதலைப் போராட்ட வீர காவியத்தில், திருநெல்வேலிக்கு ஒரு முக்கிய பங்கு உண்டு.அதற்கான காரணிகள் வெள்ளை அரசின் உருவாக்கம், இந்திய தேசிய காங்கிரஸின் தோற்றம், காங்கிரசின் போராட்டத் தன்மைகள், வ.உ.சி., சுப்ரமணிய சிவா ஆகியோரின் எழுச்சிமிக்க போராட்டங்களும், தியாகங்களும் அந்தப் போராட்டத்திற்கு மகுடம் சூட்டுபவை.இவை குறித்து தான் எஸ். காசி விஸ்வநாதன். 1908க்கு முன்னும் பின்னும் என்னும் இந்நூலை எழுதியுள்ளார்.

திருநெல்வேலியில் 14.3.198ல் நடைபெறவிருந்த வங்கத்து விடுதலை போராட்ட வீரர் விவின் சந்திர பாலரின் விடுதலைக்கான விழாவாக நடைபெறவிருந்த கூட்டத்திற்கான மஞ்சள் கலர் கையகல நோட்டீஸ் தேதி திருத்தப்பட்டு 9.3.1908 இரவு 8 மணி என்று பொதுமக்களுக்கு விளம்பரமாக அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்த செய்தி நெல்லை நகர் முழுவதும் பரவி தாமிரபரணி ஆற்றங்கரையில் தங்க நிற மணல் வெளி மறைந்து, மனித தலைகளால் மக்களின் கூட்டம் நிரம்பி வழிந்தது. அந்த மக்கள் “வந்தே மாதரம் “ என்று முழங்கிய முழக்கத்தால் மாவட்ட ஆட்சியரின் பங்களா அலுவலகம் கிடுகிடுத்தது என்னும் வர்ணனையால் நம்மைகட்டி இழுத்து நூலுக்குள் அழைத்து செல்கிறார் நூல் ஆசிரியர்.

பாரத அன்னையின் கை விலங்குகள் அறுத்தெறிந்து போக வேண்டும். சுதேசியும் வெல்ல வேண்டும் . பாரத நாடு விடுதலை பெற வேண்டும் .பூரண விடுதலையே நமது லட்சியம் என்று வ . உ. சி யும் ,சிவாவும் வீர முழக்கமிட்டனர். இவர்களது வீர உரைகளைக் கேட்டு மக்கள் விழித்தெழுந்தனர் இதை பொறுத்துக் கொள்ளுமா வெள்ளை அரசு? ராஜ நிந்தனை வழக்கு போட்டு இந்த ‘ராஜாளி ‘பறவைகளை வீழ்த்தி விட துடித்தது வெள்ளை ஏகாதிபத்தியம். மாவட்ட ஆட்சியர் விஞ்ச் துரையின் வஞ்சக விளையாட்டால். செல்வ குடும்பத்தில் பிறந்த வ .உ .சி. படித்த பட்டத்தைத் துறந்து, பவிசை இழந்து, செக்கிழுத்து, கல் உடைத்து, எத்தனையோ துன்ப துயரங்களை நாட்டிற்காக அனுபவித்தார். இது ஒரு கண்ணீர் காவியம்.

– இன்சுவை பாரதி

நூலாசிரியர் : எஸ்.காசி விஸ்வநாதன்
பக்கம் : 180 விலை : 150
வெளியீடு : நக்கீரன், 105 ஜான் ஜானி கான் ரோடு, ராயப்பேட்டை, சென்னை – 14

## தில்லி விவசாயி இயக்கம்: வரவிருக்கும் காலத்திற்கான ஒளி விளக்கு




ஒன்றியத்தை ஆளுகிற மோடி அரசாங்கம். விவசாயிகளுக்கு விரோதமாக கொண்டு வந்த மூன்று வேளாண் திருத்த சட்டங்களை திரும்ப பெற வேண்டும் எனக் கூறி, டெல்லி மாநகரில் விவசாயிகள் நடத்திய வீரம் செறிந்த போராட்டத்தினை முன் நின்று நடத்திய, 12 விவசாய சங்க தலைவர்களின் அனுபவ சித்திரமே “ஒளிவிளக்கு” என்னும் இன் நூல்.

2020 நவம்பர் 26 இல் விவசாயிகள் போராட்டம் துவங்கிய போது இப்படியெரு மாபெரும் எழுச்சிமிக்க போராட்டமாக இது நடைபெறும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. சாதி, மதம், மொழி, வழிபாடு, பழக்க வழக்கங்கள், கலாச்சாரங்கள் என அனைத்தையும் மீறி விவசாயிகள் ஒருவரோடு ஒருவர் கரம் கோர்த்து ஒருங்கிணைந்து நடத்திய மகத்தான போராட்டம் இது.

சட்டத்தின் சரத்துகளில் ஒரு புள்ளி அல்லது கமா போன்றவற்ற கூட மாற்ற முடியாது என்று ஆணவத்தோடு பேசியவர்களை சட்டத்தை அடியோடு வாபஸ் வாங்க வைத்த மகத்தான போராட்டம் இது. இந்தப் போராட்டத்தை வழிநடத்திகளில் குறிப்பிட்டு சொல்லத் தக்கவர்கள் பஞ் சாபி விவசாயிகள். விவசாயிகளும், தொழிலாளர்களும் ஒன்றுபட்டால் வீழ்த்த முடியாது எனக் கொக்கரிக்கும் மோடியை எளிதாக வீழ்த்தி, வீட்டுக் அனுப்ப முடியும் என்கிற வெளிச்சத்தை இந்தியர்களின் மனதில் விதைத்த போராட்டம் இது. பல விவசாயிகள் தங்கள் இன்னுயிரை அர்ப்பணித்து தான் இந்த வெற்றியை எட்டினார்கள்.

எத்தனை அடக்குமுறைகள், எத்தனை அச்சுறுத்தல்கள் இந்திய தலைநகரத்தின் எல்லைகளில் இரும்புக் கம்பிகளால் வேலி அமைத்து எதிரி நாட்டுப் படைகளை தடுப்பது போல, இந்திய விவசாயிகள் இந்திய தலைநகருக்குள் நுழைய முடியாத அளவுக்கு கட்டுப்பாடுகளை விதித்தனர் ஆளும் அரசினர். உயிரை துச்சமென மதித்து வீதிக்கு வந்த பிறகு இவர்களது கட்டுப்பாடுகள் விவசாயிகளை என்ன செய்யும்? கொட்டும் பனியும், கொளுத்தும் வெயிலும் எங்களை என்ன செய்யும்? என ஆண்களும், பெண்களும் குடும்பத்தோடு கூடாரங்களை அமைத்து குடியிருந்து போராட்டத்தை வெற்றி பெற செய்தனர்.

அந்த வீர காவியத்தை தான் “ஒளி விளக்கு” என்னும் இந்த நூலில் போராட்டக் கள நாயகர்களாக விளங்கிய விவசாய சங்கத்தின் 12 தலைவர்களின் அனுபவ வார்த்தைகளில் வீ.பா.கணேசன் விவரித்துள்ளார். வருங்கால சந்ததிகள் டெல்லி விவசாய போராட்டத்தை அறிந்து கொள்வதற்கு இந்த நூல் மிகவும் உதவிகரமாக இருக்கும். எனவே அனைவரும் வாங்கி படிக்க வேண்டுகிறோம்.

–சமரன்

நூலாசிரியர் : வீ.பா.கணேசன்
பக்கம் : 128 விலை: 130
வெளியீடு : தமிழ்நாடு விவசாய சங்கம் (பாரதி புத்தகாலயத்துடன் இணைந்து)

# சுழலும் உலகம்

## ராணுவ செலவுகள்: 4-ஆவது இடத்தில் இந்தியா!

2022ஆம் ஆண்டில் ராணுவத்துக்கான சர்வதேச செலவினம் 3.7 சதவீதம் அதிகரித்துள்ளது.

ராணுவத்துக்கான சர்வதேச செலவினம் இதுவரை இல்லாத வகையில், கடந்த ஆண்டில் 2.24 லட்சம் கோடி அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளதென ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி மையம் (எஸ்ஐபிஆர்ஐ) ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது.

ராணுவத்துக்கான மொத்த செலவினமானது சர்வதேச மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) மதிப்பில் 2.2 சதவீதமாக உள்ளது. ராணுவத்துக்கு அதிகமாக செலவிடும் நாடுகளில் அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. சீனா 2ஆவது இடத்தில் உள்ளது. கடந்த 2021ஆம் ஆண்டில் 3ஆவது இடத்தில் இருந்த இந்தியாவை கடந்த ஆண்டில் ரஷியா பின்னுக்குத் தள்ளியுள்ளது. இந்தியா 4ஆவது இடத்திலும், சவூதி அரேபியா 5ஆவது இடத்திலும் உள்ளன.

**ராணுவ செலவினத்தில் முன்னணி நாடுகள்**

| இடம் | நாடு | செலவினம் (டாலரில்) | 2021–இல் இருந்து மாற்றம் (%) | ஜிடிபி–யில் செலவின சதவீதம்(%) |
|---|---|---|---|---|
| 1 | அமெரிக்கா | 87,700 கோடி | 0.7 | 3.5 |
| 2 | சீனா | 29,200 கோடி | 4.2 | 1.6 |
| 3 | ரஷியா | 8,640 கோடி | 9.2 | 4.1 |
| 4 | இந்தியா | 8,140 கோடி | 6 | 2.4 |
| 5 | சவூதி அரேபியா | 7,500 கோடி | 16 | 7.4 |
| 6 | பிரிட்டன் | 6,850 கோடி | 3.7 | 2.2 |
| 7 | ஜெர்மனி | 5,580 கோடி | 2.3 | 1.4 |
| 8 | பிரான்ஸ் | 5,360 கோடி | 0.6 | 1.9 |
| 9 | தென் கொரியா | 4,640 கோடி | –2.5 | 2.7 |
| 10 | ஜப்பான் | 4,600 கோடி | 5.9 | 1.1 |

முதல் 5 இடங்களில் உள்ள நாடுகளின் மொத்த ராணுவ செலவினம், சர்வதேச ராணுவ செலவினத்தில் 63 சதவீதமாக உள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் ரஷியாவின் ராணுவ செலவினம் 9.2 சதவீதம் அதிகரித்துள்ளது. அதே வேளையில், உக்ரைனின் ராணுவ செலவினம் 640 சதவீதம் அதிகரித்துள்ளது.

எல்லாம் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளிடம் வாங்கி கடன். போருக்குப் பின் இந்த கடன்களுக்கு வட்டி கட்டியே அந்த நாடு தொலையப்போகிறது.



15ம் பக்கத் தொடர்ச்சி

ஜனசக்தி ஆசிரியர் பொறுப்பை ஏற்று நெருக்கடியான காலத்தில் குயிலனுடன் இணைந்து இவர் ஆற்றிய பணிகளை ஜனசக்தி பொன் விழா மலரில் மறைந்த தோழர் ப.மாணிக்கம் எழுதியுள்ள கட்டுரை ஒன்றின் மூலம் அறிய முடிகிறது.

### முன்னணி இதழை கொண்டு வந்தார்

ஜனசக்தி இதழ் தடை செய்யப்பட்ட காலத்தில் கட்சியின் கருத்துக்களை முன்னெடுத்து செல்ல கவிஞர் குயிலன் அவர்களை ஆசிரியராகவும், தன்னை துணை ஆசிரியராகவும் கொண்டு முன்னணி என்ற இதழை தனது சொந்த முயற்சியில் வெளிக் கொண்டு வந்தார். 1948 அக்டோபர் மாதம் முதல் 1949 செப்டம்பர் மாதம் வரை 48 இதழ்கள் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் வெளிவந்துள்ளன.

இந்த காலகட்டத்தில் தான் மே தினமே நீ வருக! என்ற பாடலை கவிஞர் தமிழ் ஒளி எழுதியுள்ளார். இந்த கவிதை 1949ல் எழுதப்பட்டு 1952ம் ஆண்டில் வெளிவந்தது என்று குறிப்பிடுகிறார் செ.து.சஞ்சீவி.

### முதல் மேதின கவிதை

மே தினத்தை குறித்த இந்த கவிதை தமிழுக்கு புதிது.. சர்வதேச பாரம்பரியத்தை வளர்ப்பதே தனது நோக்கம் என்று கவிஞர் தமிழ் ஒளி பிரகடனம் செய்கிறார்.

கோழிக்கு முன்னெழுந்து
கொத்தடிமை போலுழைத்துப்
பாடுபட்ட ஏழை முகம்
பார்த்து பதைபதைத்துக்
கண்ணீர் துடைக்க வந்த
காலமே நீ வருக!

என்று பாடலின் தொடகத்திலேயே கட்டியங் கூறி மே தினத்தை வரவேற்கிறார் கவிஞர் தமிழ் ஒளி.

மண்ணை இரும்பை
மரத்தைப் பொருளாக்கி
விண்ணில் மழையிறக்கி
மேதினிக்கு நீர்ப் பாய்ச்சி
வாழ்ந்த தொழிலாளி!

என்று தொழிலாளர்களின் உழைப்பின் மேன்மையை போற்றுகிறார் கவிஞர் தமிழ் ஒளி.

தொழிலாளர் உழைப்பை சுரண்டி
கொள்ளையடிக்கும் பொய்யர் கூட்டம்

என்று முதலாளி வர்க்கத்தை கடுமையாக சாடுகிறார். அடுத்த வரியில்

தொழிலாளர் கையில் விலங்கிட்டு
காலமெல்லாம் கொள்ளையிட்ட
பொய்யர் குலம் நடுங்க
பொங்கி வந்த மேதினமே

என்று குறிப்பிடுகிறார்.

தாழ் மைத் தகர்க்கத்
தலைநிமிர்ந்த மேதினியில்
வாழ்வின் சமாதானம் வாய்ந்த
நெடுந் திரையில், ஜீவிதமாய்
நின்ற தொரு சித்திரம் நீ
வானமரக்காவியம் நீ
கற்பனை நீ; காணுமொரு காட்சியும் நீ
தீரா இருளொழித்து திக்கு விளங்க
இதோ வாராய் வளர் பொருளே
மேதினமே வாராய்“

என்று மே தினத்தை போற்றி வரவேற்கிறார்

ஜீவிதமாய் நின்ற தொரு சித்திரம், வானமரக்காவியம், கற்பனை காணும் காட்சி, தீராத இருள் நீக்கும் ஒளி விளக்கு, வளர் பொருள் என்றெல்லாம் மே தினத்தை கவிஞர் தமிழ் ஒளி போற்றி புகழ்வதை காணமுடிகிறது.

பொந்தில் உயிர் வாழ்ந்தார்
போக்கற்றார், இன்பமிலார்
கந்தல் மனிதரவர் கையில் அதிகாரம் ஏற்றி வைத்த
நின் பெருமை என்னுயிர்க்கும்
மேலன்றோ.. போற்றினேன்
வையப்புரட்சியாய் நீ வருக!

மே தினத்தின் மேன்மையை போற்றும் இந்த பாடலை மேதின நாளில் நினைவு கூறுவது மிகவும் பொருத்தமானது.

தொடர்புக்கு: 9843177943

கலை இலக்கியப் பூங்கா

"மன்னர் மாறலாம், ஆட்சி மாறலாம், ஆனால் அதிகாரம் மட்டுமே நிலையானது" என்று எயினர் கூட்டத்தில் இருந்து ஒருவர் பேசுவது என பல வசனங்கள் மனதில் நீங்காமல் நீண்ட காலம் நிலைத்திருக்கும்.



எம்.ஆர். ஆதவன்




**இதுவரை தமிழ் மற்றும் இந்திய மொழிகளில் எடுக்கப்பட்ட வரலாற்றுப் படங்களை விட யாத்திசை தனித்து நிற்கிறது. ஏனெனில், இப்படம் ஒரு மன்னனின் கண்ணோட்டத்தில் இல்லாமல், ஒரு சாமானியனின் கண்ணோட்டத்திலிருந்து நமக்குக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது.**

ரணதீரபாண்டியனின் ஆட்சியில் எயினர்களுக்கும், பாண்டியர்களுக்கும் நடந்த போரை கருவாய்க் கொண்டு, சில புனைவுகளோடு சேர்த்து வடிக்கப்பட்டது இந்தத் திரைக்கதை.

இரு பெரும் படைகள் மோதி போரிடுவதாக கதை அமைந்தால், போர்க்களத்தை பிரமாண்டமாகக் காட்டுவார்கள். இப்போதெல்லாம் கணினி தொழில்நுட்பத்தையும் சேர்த்து, லட்சக்கணக்கானவர்கள் போர்க்களத்தில் இயங்குவதாக காட்டிவிடுகிறார்கள்.

ஆனால் போர் புரிவதற்கு ஆயிரம் பேரை திரட்டுவதற்கு என்ன பாடு படுகிறார்கள் என்பதை அறிமுக இயக்குநர் தரணி ராஜேந்திரன் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கிறார்.

சேர, சோழ படைகளை வீழ்த்தி, அந்நிலத்தை ஆண்டு கொண்டிருக்கிற பாண்டிய மன்னனிடம், எயினர் கூட்டத்திலிருந்து வந்த கொதி என்கிற ஒரு சாமானியன், அஞ்சாது போர் புரிவதைக் காட்டியதற்காகவே தனி பாராட்டுக்கள்

கதை எந்த நூற்றாண்டில் நடந்தாலும் சரி, வரலாற்றுப் படம் என்று வந்துவிட்டால், மன்னர்களையும் ராணிகளையும் ஜாய் ஆலுக்காஸ், தனிஷ் நகைக் கடை விளம்பரங்களில் வருபவர்களை போல, அணிகலன்களாலேயே நிறைத்திருப்பார்கள்.

ஏழாம் நூற்றாண்டில் என்னென்ன அணிகலன்கள் இருந்தன, ஆண்கள் எப்படி அலங்கரித்துக் கொள்வார்கள், பெண்கள் எப்படி அலங்கரித்துக் கொள்வார்கள் என்று ஆய்வுகளை மேற்கொண்டு கண்டறிந்து, அதன்படி நடிகர்களை தோற்றப் படுத்தியது மிகவும் அருமை.

மறக்கப்பட்ட கொற்றவை வழிபாடு, அதற்குக் கொடுக்கும் பலிகள், நவகண்ட வழிபாடு, தன்னைத்தானே பலியிடுவது என்று நுணுக்கமான விஷயங்களைச் சேர்த்து, 1400 ஆண்டுகளுக்கு முன்னர், நமது மூதாதையர் வாழ்ந்த வாழ்க்கையை ரத்தமும் சதையுமாய் வரைந்து தருகிறது இந்தப் படம்.

இப்படத்தில் வரும் அனைத்து கதாபாத்திரங்களையும் ஏற்று நடிப்பவர்கள், புதுமுகங்கள். அதனால் தானோ இந்தப் படத்தின் நடிகர்களையும், அவர்கள் ஏற்று நடித்திருக்கும் பாத்திரங்களையும் பிரித்துப் பார்க்கவே முடிவதில்லை.

கொதி என்ற கதாபாத்திரத்தில் செய்யோன்னும், ரணதீரபாண்டியனாக சக்திமித்திரனும், தேவரடியாராக ராஜலட்சுமி கோபாலகிருஷ்ணனும், எயினர் கூட்டத்தின் 'பெரியாம்பிளை'யாக 'லாக்கப்' புகழ் சந்திரகுமாரும் மற்றும் பலரும் சிறந்த நடிப்பைத் தந்துள்ளனர். அந்தக் காலத்துக்கும் சூழலுக்கும் ஏற்ற வகையில் முறுக்கேறிய உடல்வாகு கொண்டவர்களாக, நடிகர்கள் தேர்வு நடந்திருக்கிறது.

சிலிர்க்க வைக்கும் ஒளிப்பதிவு இப்படத்துக்கு பெரும் பலமாக நிற்கிறது. சண்டைக் காட்சிகள், கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் எல்லாம் துளியும் மிகை இல்லாது, செய் நேர்த்தியோடு படமாக்கப்பட்டுள்ளன.

படத்தில் வரும் முல்லை, குறிஞ்சி, பாலை நிலங்கள் எல்லாம் தமிழ்நாட்டிலேயே எடுக்கப்பட்டிருப்பது வியப்பளிக்கிறது. பெரும் சினிமா வணிகர்கள் கையில் இக்களம் கிடைத்து இருந்தால், தமிழ்நாட்டில் சரியான காட்சிப் பின்னணி அமையாது எனச் சொல்லி, கண்டம் விட்டு கண்டம் தாண்டிப் பறந்து, பல நாடுகளில் எடுக்கப்பட்டதை தமிழ்நாட்டில் நிகழ்வது போல் பொய் நெல் குத்தி இருப்பார்கள்.

மிகவும் சிறப்பாக ஒளிப்பதிவு செய்த அகிலேஷ் காத்தமுத்து அவர்களுக்கு பெரிய பாராட்டுக்கள். படத்தில் ஒரு மணி நேரத்திற்கு மேலாக நடைபெறும் சண்டைக் காட்சிகளைத் தொய்வே இல்லாமல், பொருந்தாத அலங்காரங்கள் ஏதுமின்றி, எதார்த்தமாகத் தந்திருக்கிற சண்டைப் பயிற்சியாளர் ஓம் பிரகாஷ் அவர்களுக்கும் வாழ்த்துக்கள்.

படத்தின் உயிரோட்டமான, தைக்கும் வசனங்கள் நுண்ணரசியல் பேசுகின்றன. "கொதி, நீ உயர்ந்தவன். உன்னோடு இருப்பதினால் நானும் உயர்கிறேன்" என்று எயினர் கூட்டத்தில் ஒருவர் பேசுகிறார். "எனக்கு கண்ணன் வேண்டும் அல்லது விடுதலை வேண்டும்" என்று தேவரடியார் சொல்வது, கடைசியில் "மன்னர் மாறலாம், ஆட்சி மாறலாம், ஆனால் அதிகாரம் மட்டுமே நிலையானது" என்று எயினர் கூட்டத்தில் இருந்து ஒருவர் பேசுவது என பல வசனங்கள் மனதில் நீங்காமல் நிலைத்திருக்கும்.

வசனமும் இல்லாமல், தனி சீன்களும் வைக்காமல் போகிற போக்கில், அதிகாரத்தில் நிலைபெற்று இருப்பவர்களுக்கும் ஒடுக்கப்பட்ட நிலையில் இருந்து விடுதலை பெறத் துடிக்கும் மக்களுக்கும் இடையிலான வேறுபாட்டை, படம் பார்ப்பவர்கள் தாமாகப் புரிந்து கொள்ளும் வகையில் நகர்கிறது படம்.

"மன்னர் இல்லாத போது, நாட்டை வழி நடத்த நானே அதிகாரம் கொண்டவன்" என்று உச்சிக்குடுமி வைத்து புரி நூல் போட்டவர் சொல்லும் போது, கொதி துப்பிவிட்டு செல்கிறார். பாண்டியன் போருக்கு ஆள் சேர்ப்பதற்காக ஒரு இனக்குழுவிடம் இருந்து பெண்ணை மணந்து கொண்டு, அவள் தன்னிடம் 'காதல் இருக்கிறதா' என்று கேட்கும்போது 'உன்மேல் எனக்கு அதிகாரம் இருக்கிறது' என்று கூறுவது அங்கு பெண்ணின் நிலை என்ன என சொல்லாமல் சொல்கிறது. ஆனால் அதே சமயத்தில் ஒடுக்கப்பட்டிருக்கும் எயினர் குலப் பெண்களோ ஆயுதம் ஏந்தி போர்க்களம் புகுகிறார்கள்.

படத்தில் எயினர்கள் சங்க காலத்தமிழில் உரையாடுகிறார்கள். அது நமக்கு புரியாது என்பதாலேயே, நவீன காலத் தமிழில், துணைத் தலைப்புகள் படத்தில் வருகின்றன.

அதிகாரத்துக்காகத் தான் போர் நடக்கிறது. மன்னன் தன் அதிகாரத்தை நிலை நாட்டுவதற்காக என்ன பாதகமும் செய்ய ஆயத்தமாகவே இருந்தார்கள்; இருப்பார்கள் என்பதை படம் தெள்ளத் தெளிவாக வெளிச்சம் போட்டு காட்டுகிறது

படம் வெற்றிகரமாகவே ஓடிக் கொண்டிருக்கிறது என்ற செய்தி, புதிய முயற்சிகளுக்கு தமிழ் மக்களிடையே வரவேற்பு பெருகுகிறது என்பதைக் காட்டுகிறது. கோடிக்கணக்கான ரூபாய்களை கொட்டினால்தான் படம் வெற்றிபெறும் என்று உருவாக்கப்பட்டுள்ள மாயையை தமிழ் மக்கள் தகர்த்தெறிந்து இருக்கிறார்கள்.

படத்திற்கு வரவேற்பு இருந்தாலும், திரையரங்குகள் கிடைப்பது பெரும் செல்வாக்கு செலுத்தும் கட்டமைக்கப்பட்ட அதிகார மையங்களின் கைகளில் இருக்கிறது. இன்னொரு பிரம்மாண்டப்படமான பொன்னியின் செல்வன் இரண்டாம் பகுதி வருவதால், இந்த யதார்த்தப் படத்திற்கு எவ்வளவு காலம் அரங்குகள் கிடைக்கும் என சொல்ல முடியாது.

எனவே கூடியவிரைவில் சென்று பார்த்து இந்த நல்ல படத்திற்கு நாம் ஆதரவளிக்க வேண்டும்.

# கண்ணீர் துடைக்க வந்த காலமே.. நீ வருக!





எல்லை. சிவக்குமார்

தமிழ்நாட்டில் மே தினத்தை முதலில் கொண்டாடியவர் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர். அது போல மே தினம் குறித்து முதன்முதலில் கவிதை எழுதியவர் கவிஞர் தமிழ்ஒளி.

அந்த கவிதை இன்றளவும் புதுமை இலக்கியம் என்று போற்றப்படுகிறது. இது ஒரு நீண்ட கவிதை. தமிழ் இலக்கியத்திற்கு மட்டும் இந்த கவிதை புதுமை அல்ல. வேறுஎந்த இந்திய மொழிகளிலும் மே தினம் குறித்து இதுபோன்ற கவிதை இலக்கியம் அந்த காலகட்டத்தில் யாரும் படைக்கவில்லை என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

1924 ஆம் ஆண்டு செப்டம்பர் 21ல் பிறந்த இவர் தனது மாணவர் பருவத்தில் புரட்சி கவிஞர் பாரதிதாசன் அவர்களிடம் சீராக சேர்ந்து கவிதை எழுதும் பயிற்சி பெற்றார். தனது 20 வயதில் கவிதை எழுத தொடங்கி, தமிழ் கவிதை உலகில் 1944ஆம் ஆண்டு முதல் வலம் வரத் தொடங்கினார். இவரது ஆரம்ப கால கவிதைகள் சுயமரியாதை கருத்துகளுடன் சமூக சீர்திருத்த கவிதைகளாக வெளிவந்தன.

## மார்க்சிய ஒளி பெற்ற தமிழ்ஒளி

திரைத்துறையில் காலூன்ற சென்னை சென்ற இவர் கவிஞர் குயிலனுடன் தோழமை கொள்கிறார். அவர் மூலமாக மார்க்சிய கொள்கைகளில் ஈடுபாடு கொள்கிறார். 1947 ஆம் ஆண்டு இலக்கியப் பேராசான் ஜீவா முன்னிலையில் எழுத்தாளர் குயிலனுடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்டார் கவிஞர் தமிழ் ஒளி.

அதனைத் தொடர்ந்து ஜனசக்தி ஆசிரியர் குழுவில் இணைந்து பணியாற்றினார். இந்தகாலகட்டத்தில் எஸ். ஆர். கே. போன்றவர்கள் மூலம் மார்க்சியம் குறித்து ஆழ்ந்து கற்று கொள்கிறார். ஜெயகாந்தனின் உற்ற தோழனாக விளங்கினார். அவருக்கு இலக்கணம் இலக்கியம் குறித்து பயிற்சிகள் அளித்தார்.

1949 ஆம் ஆண்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மீது தடை விதிக்கப்பட்டது தலைவர்கள் பலரும் தலைமறைவாக இருந்த நிலையில்,

தொடர்ச்சி 14ம் பக்கம்

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 29.04.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

## திருவாரூர் மாவட்டத்தில்

# 1500 ஜனசக்தி ஆண்டு சந்தா! 100 ஆயுள் சந்தாக்கள் வழங்கப்பட்டன!

ஜனசக்தி, தாமரை சந்தா வழங்கும் சிறப்பு பேரவை திருவாரூரில் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் நாகராஜ் வரவேற்று, கட்சியின் மாவட்ட செயலாளர் வை.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது.

ஜனசக்தி ஆசிரியரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினருமான டி.எம்.மூர்த்தி, தேசியக்குழு உறுப்பினர் வை.சிவபுண்ணியம் எக்ஸ்.எம்.எல்.ஏ., மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் கோ.பழனிச்சாமி, மாநில நிர்வாக குழு உறுப்பினர் திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, ஆசிரியர் குழு உறுப்பினர் த.லெனின், ஜனசக்தி மேலாளர் இளசை கணேசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பின் கே.உலகநாதன், மாவட்ட துணை செயலாளர் எஸ்.கேசவராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட நிர்வாகக்குழு, மாவட்டக்குழு உறுப்பினர்கள், 14 இடைநிலைக்குழுவின் செயலாளர்கள், கிளை செயலாளர்கள் ஜனசக்தி பொறுப்பாளர்கள் மற்றும்




300க்கும் மேற்பட்ட தோழர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

திருவாரூர் மாவட்டத்தில் ஏப்ரல் 5ம் தேதி தொடங்கிய ஜனசக்தி சந்தா சேர்ப்பு இயக்கம் இருபது தினங்களில் கோட்டூர் ஒன்றியம் 380, திருத்துறைப்பூண்டி ஒன்றியம் 350, முத்துப்பேட்டை ஒன்றியம் 104, மன்னார்குடி ஒன்றியம் 100, நன்னிலம் ஒன்றியம் 90, திருத்துறைப்பூண்டி நகரம் 64, மன்னார்குடி நகரம் 44, திருவாரூர் நகரம் 40, கொராடச்சேரி ஒன்றியம் 40, திருவாரூர் ஒன்றியம் 31, வலங்கைமான் 22, குடவாசல் 7, கூத்தாநல்லூர் 50, நீடாமங்கலம் 27 என ஒன்றியம், மாவட்டம் முழுவதுமிருந்து கொடுக்கப்பட்ட ஆண்டு சந்தா 1500ம், ஆயுள் சந்தா 100ம், தாமரை சந்தா 80ம் ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் அ.பாஸ்கர், டி.எம். மூர்த்தியிடம் வழங்கினர். நகர செயலாளர் பழக்கடை செல்வம் நன்றி கூறினார்.

# வேலை நேர அதிகரிப்பு சட்டம் நிறுத்தி வைப்பு: முதல்வருக்கு நன்றி

வேலை நேர அதிகரிப்பு சட்டம் நிறுத்தி வைப்பு முதல்வருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நன்றி தெரிவித்துள்ளது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாடு சட்டமன்றத்தின் கடந்த 21.04.2023 ஆம் தேதி எதிர்ப்புகளுக்கு மத்தியில் தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் 2023 குரல் வாக்கெடுப்பில் நிறைவேற்றப்பட்டது.

இச்சட்டத்தை நிறைவேற்றக் கூடாது என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி வெளிநடப்பு செய்தனர்.

தொழிற்சங்கங்களும், தொழிலாளர்களும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதுடன் எதிர்ப்புத் தெரிவித்து வேலைநிறுத்தம் அறிவித்தனர்.

இந்த நிலையில் தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசுமாறு தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டதும், தொழிற்சங்க தலைவர்களின் கருத்துக்களையும், தோழமைக் கட்சிகளின் வேண்டுகோளையும் ஏற்று, தொழிலாளர்களின் உணர்வுகளை மதித்து, தொழிற்சாலை திருத்தச் சட்டத்தை நிறுத்தி வைப்பதாக முதலமைச்சர் அறிவித்துள்ளார். விமர்சனங்களுக்கு காது கொடுப்பதும், தவறுகளை திருத்திக் கொள்வதும் ஜனநாயகத்தின் உயர்ந்த பண்பாகும். அந்த வகையில் காலத்தில் தலையிட்டு, தொழிலாளர் உரிமைகளை பாதுகாத்த முதலமைச்சர் நடவடிக்கைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு நன்றி பாராட்டுகிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# உலக அளவில் உழைப்பு நேரம்

8 மணிநேர உழைப்பு நேரத்தை 12 மணி நேரமாக அதிகரிப்பதன் மூலம் திறன் அதிகரிக்குமா?

உலக மக்கள் தொகையில் 58% மக்கள் ஒவ்வொருவரும் தங்களது மூன்றில் ஒரு பங்கு வாழ்நாள் நேரத்தை அவர்களது சொந்த வாழ்க்கை மேம்படவும், அவர்களது குடும்பம் மற்றும் சமூக வாழ்க்கைக்காக உழைக்கிறார்கள் என்று உலக சுகாதார நிறுவனத்தின் இணையதள கட்டுரை குறிப்பிடுகிறது.

சராசரியாக மக்கள் தங்கள் வாழ்நாளில் 13 ஆண்டுகள் 2 மாதத்தை உழைப்பதில் செலவிடுகிறார்கள் என்று 2017 ஆம் ஆண்டு ஹஃபிண்டன்போஸ்ட் என்ற பத்திரிக்கையின் ஆய்வு கட்டுரை குறிப்பிடுகிறது.

இதில் ஓஇசிடி (ளிணிசிஞி) நாடுகள் அதிலும் குறிப்பாக உலகின் மிக வளர்ந்த நாடுகள் என்று அறியப்படுகிற அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, பிரான்சு போன்றவற்றில் உழைப்பு நேரம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இதன்படி கடந்த 2020 ஆம் ஆண்டில் மெக்சிகோ நாட்டில்தான் மிக நீண்ட நேர உழைப்பு காலம் இருப்பதாகவும், ஜெர்மனியில் உலகத்திலேயே மிகக் குறைந்த நேர உழைப்பு இருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

### ஒரு வாரத்திற்கு உழைப்பு மணி நேரம்:

மெக்சிகோ 41 , கொரியா 37, சிலி 35, இஸ்ரேல் 34 , அமெரிக்கா 34, அயர்லாந்து 34, கிரீஸ் 33, ஆஸ்திரேலியா 32, கனடா 32, ஜப்பான் 31, ஸ்பெயின் 30, இத்தாலி 30 , ஸ்விட்சர்லாந்து 29, ஸ்வீடன் 27, பிரான்ஸ் 27, நார்வே 26, இங்கிலாந்து 26, டென்மார்க் 26, ஜெர்மனி 26. ஆகிய மணி நேரங்கள் ஆகும்.

ஜப்பான் உழைப்புக்கு பெயர் பெற்ற நாடு. அங்கு தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தமே நடைபெறுவதில்லை என்று இங்கு உள்ள சங்கப் பரிவாரங்கள் எப்போதும் பிரச்சாரம் செய்வது உண்டு. ஜப்பானில் முன்பு தொழிலாளர்கள் அதிக நேரம் உழைத்தனர். அதன் விளைவாக கரோஷி மரணங்கள், அதாவது அதிக வேலைப்பளுவின் காரணமாக தற்கொலை செய்து கொள்ளும் மரணங்கள் ஆகும். இதன் பிறகுதான் அங்கு தொழிலாளர் நலச் சட்டங்களில் திருத்தம் கொண்டுவரப்பட்டு வாரத்திற்கு 31 மணி நேரமாக அதாவது ஆண்டிற்கு 1598 மணி நேரம் என்பதாக வரையறுக்கப்பட்டது.

எனவே உழைப்பின் நேரத்தை கூட்டுவதன் மூலம் உற்பத்தி பெருகாது, மாறாக குறையும் என்பதும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

## அஞ்சல் ஊழியர் சங்கத்திற்கு

# அங்கீகாரத்தை ரத்து செய்தது ஜனநாயக விரோதச் செயல்!

### ஏஐடியுசி பொதுச் செயலாளர் அமர்ஜித் கவுர் கண்டனம்

அஞ்சலக ஊழியர்களின் தேசிய கூட்டமைப்பு (என்எப்பிஇ) மற்றும் அகில இந்திய அஞ்சல் ஊழியர் சங்கம் (ஏஐபிஇயு) ஆகியவற்றின் அங்கீகாரத்தை ரத்து செய்து, அஞ்சல் துறை எடுத்துள்ள கடுமையான நடவடிக்கையை ஏஐடியுசி கண்டிக்கிறது.

இந்திய அரசின் அஞ்சல் துறை 26. 04.2023 தேதியிட்ட உத்தரவின் மூலம், 70 சதவீதத்துக்கும் அதிகமான அஞ்சல் ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு முக்கிய அஞ்சல் ஊழியர் தொழிற்சங்க அமைப்புகளின் அங்கீகாரத்தை ரத்து செய்துள்ளது அதிர்ச்சியளிக்கிறது.

சட்டப்பூர்வமான தொழிற்சங்க உரிமைகளை அடைவதற்காக ஆங்கிலேயர் காலத்திலிருந்தே NFPTE என்ற பதாகையின் கீழ் அஞ்சல் ஊழியர்கள் நீண்ட சிறப்புமிக்க போராட்டங்களை நடத்திய வரலாறு கொண்டவை.

NFPE மற்றும் AIPEU க்கு எதிராக ஒரு போட்டி தொழிற்சங்கம் தந்த ஒரு அர்த்தமற்ற புகாரின் அடிப்படையில் அஞ்சல் துறை இந்தக் கடுமையான நடவடிக்கையை எடுத்துள்ளது. NFPE மற்றும் AIPEU ஆகியவை தில்லியில் நடந்த விவசாயிகளின் போராட்டம், சிஐடியு மற்றும் சிபிஎம் ஆகிய அமைப்புகளின் கணக்குகளுக்கு நிதியுதவி செய்துள்ளதாக அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

போராடும் சகோதர சங்கங்கள் மற்றும் பல்வேறு துறை தொழிலாளர்களுக்கு தொழிற்சங்கங்கள் ஆதரவளிப்பதும், ஒருமைப்பாடு தெரிவிப்பதும் மற்றும் நிதி உதவி வழங்குவதும் இந்தியாவில் புதிதல்ல. சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த ஒற்றுமை நடவடிக்கைகளில் சட்டவிரோதமோ அல்லது தவறான நடத்தையோ இல்லை.

பழிவாங்கும் வகையில் ஒரு பெரிய தொழிற்சங்கம் மற்றும் கூட்டமைப்புக்கான அங்கீகாரத்தை ஜனநாயக விரோதமான முறையில் ரத்து செய்துள்ளது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

சிஐடியு போன்ற அங்கீகரிக்கப்பட்ட மத்திய தொழிற்சங்கத்தை எப்படி அரசியல் கட்சியாக முத்திரை குத்த முடியும் என்று புரிந்து கொள்ள முடியவில்லை.

70 சதவீதத்திற்கும் அதிகமான ஊழியர்களை உறுப்பினர்களைக் கொண்ட, நிர்வாகத்திலும் அது உண்மையான எண்ணிக்கைதான் என சரிபார்த்து ஏற்கப்பட்ட தொழிற்சங்கத்தின் பதிவை ரத்து செய்து இருப்பது, அரசாங்கத்தின் அப்பட்டமான பழிவாங்கும் போக்கையும், ஒருதலைபட்சமான நிலையையும் காட்டுகிறது. இதுபோன்ற ஜனநாயக விரோத செயல்களாலும், முடிவுகளாலும் தொழிலாளர்களை வாயடைக்க முடியாது என்பதை அரசு உணர வேண்டும்.

ஒரு பெரிய தொழிற்சங்கத்தின் அங்கீகாரத்தை திரும்பப் பெற அஞ்சல் துறை எடுத்த கடுமையான மற்றும் ஜனநாயகமற்ற முடிவை ஏஐடியுசி கண்டிக்கிறது.

தொழிற்சங்கங்கள் மீதான இத்தகைய கடுமையான தாக்குதல்களை எதிர்க்கவும் எதிர்ப்பு தெரிவிக்கவும் களமிறங்க வேண்டும் என நாட்டின் ஒட்டுமொத்த தொழிலாள வர்க்கத்திற்கும் ஏஐடியுசி அழைப்பு விடுக்கிறது.

இந்திய அரசு தனது முடிவை உடனடியாக திரும்பப் பெறவும், தேசிய அஞ்சல் ஊழியர் கூட்டமைப்பு மற்றும் அகில இந்திய அஞ்சல் ஊழியர் சங்கத்திற்கு மறுக்கப்பட்டுள்ள அங்கீகாரத்தை திரும்ப வழங்க வேண்டும் என வலியுறுத்துகிறது.

அஞ்சல் துறையின் ஜனநாயக விரோத முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தேசிய அஞ்சல் ஊழியர் சம்மேளனம் (என்எப்பிஇ) மற்றும் அகில இந்திய அஞ்சல் ஊழியர் சங்கம் (குரூப்சி) ஆகியவற்றுக்கு மீண்டும் அங்கீகாரம் வழங்கக் கோரியும்

தொழிலாளர் துறை அமைச்சர் மற்றும் தகவல் தொடர்பு அமைச்சருக்கு ஏஐடியுசி கடிதம் எழுதியுள்ளது.

இவ்வாறு அமர்ஜித் கவுர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.